
# ஜாமக்காரன்

WATCHMAN



காவல்காரன்

*(ஜாமக்காரனில்) எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள். 1 தெச 5:21*

*ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான், ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி 2:15.*

✆0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com



**கர்த்தருக்குள் அன்பான வாசகர்களுக்கு,**

**இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துகிறேன்.**

‘ கடந்த மாதம்West Bangal மேற்கு வங்காளம் பகுதியில் இமயமலைஅடிவாரத்தில் நேபாளத்தை ஒட்டிய படன் என்ற பகுதிக்கும் -Kadiyakanj என்ற இடத்துக்கும் இடையே மெடிக்கல் கேம்ப் நடத்தி சுவிசேஷம்அறிவிக்க மிக நீண்ட பயணம் மேற்கொண்டேன். நேபாளத்தில் ஏற்பட்ட பூமிஅதிர்ச்சியின் காரணமாக தரைமட்டம் ஆகிப்போன நேபாள தலைநகர் காத்மாண்டு நகரிலும், அதை சுற்றியுள்ள பகுதியிலும் வீடு இழந்தவர்கள் ஆயிரக்கணக்கில் இமயமலை அடிவார கிராமங்களுக்கு இடம்பெயர்ந்து ரெக்சின் கூடாரங்களில் குடியிருக்கிறார்கள்.

பரிதாபமான சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கும் அம்மக்களுக்கு புதுவாழ்வு எப்போது வரும்? வீடு சொத்துக்கள் குடும்பங்கள் இழந்த அவர்களுக்கு இழந்ததையெல்லாம் தாங்களுக்கு திரும்ப கிடைக்க வழி உண்டா?என்ற ஏக்கத்தோடும் கேள்வியுடனும் வாழ்ந்துக்கொண்டிருக்கும் அவர்களை பார்க்கவே மிகவும் பரிதாபமாக இருக்கிறது.

‘ ஏற்கனவே இலங்கையில் இனபடுகொலைகள், உள்நாட்டு போர் இவைகளால் பாதிக்கப்பட்ட லட்சக்கணக்கானவர்களை 1984ம் ஆண்டு நான் நேரில் சந்தித்தபோது இதே கேள்விகளைத்தான் அவர்கள் என்னிடமும் அவர்களுக்கு உதவிசெய்யவந்த ஐக்கிய நாட்டு சபை பொருப்பாளர்களிடமும் அவர்களோடு இணைந்து உதவிசெய்ய வந்த செஞ்சிலுவை சங்கத்தினிடமும் கேட்டார்கள். யாரிடம் கேட்டாலும் ஒரே பதில் கடவுள் உதவிசெய்வார். இந்த பதில் அவர்கள் யாரையும் திருப்திப்படுத்தவில்லை. நம்பிக்கையற்ற நிலையில்வாழும் நேபாள மக்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கவே நாங்கள் பயந்தோம். சுவிசேஷம் அறிவித்தாலும் அம்மக்கள் அதை கேட்கவோ, விசுவாசிக்கவோ விரும்பாத நிலையில் இருப்பதைத்தான் நாங்கள் கண்டோம், என்றாலும் இந்த இக்கட்டான சூழ்நிலையிலும் இயேசுகிறிஸ்துவின்மேல் நம்பிக்கை வையுங்கள். அவரை நம்பினவர்கள் ஒருநாளும் கைவிடப்பட்டதில்லை. அவருக்கு பெயரே இரட்சகர் என்பதாகும் என்று அறிவித்து திரும்பினோம். அங்குள்ள RED CROSS சங்கத்தினர் கூறியதாவது: பல நாடுகளிலிருந்தும் குறிப்பாக இந்தியாவிலிருந்து உதவி செய்ய உங்களைப்போல மருத்துவ உதவி செய்யவும், பொருள் உதவிகள் செய்யவும் வருகிறவர்கள். இரண்டு நாட்கள் அல்லது மூன்று நாட்கள் வந்து போட்டோக்களை எடுத்துக்கொண்டு போய்விடுகிறார்கள். அப்படிப்பட்ட உதவிகளை நேபாள நாட்டு

ஜூலை 2015

ஆள்பவர்களும்,நேபாள நாட்டு மக்களும் விரும்பவில்லை. மட்டுமல்ல இப்படி இரண்டு நாட்கள் வந்துபோகும் உதவியாளர்களை விரும்பவும் இல்லை.இப்படிப்பட்டவர்களை வரவேண்டாம் என்றும் கூறிவிடுகிறார்கள். அது மட்டுமல்ல, அங்கு உதவி செய்ய வந்தவர்களைகூட திரும்பிபோகும்படி கட்டாயப்படுத்துகிறார்கள். அவர்கள் உள்ளத்தின் விரத்தி,வேதனை,மனதில் ஏற்பட்ட காயம் மிக ஆழமானது.

‘ மாதக்கணக்கில் நேபாளத்தில் தங்கி திட்டமிட்டு,ஒழுங்கான முறையில் நிலையான வைத்திய சேவை, வீடுகள் சீரமைத்தல், பல மாதங்களுக்கு தொடர்ந்த ஆகார உதவி இப்படி செயல் திட்டத்தோடு வருபவர்களை அவர்கள் வரவேற்கிறார்கள். அப்படிப்பட்ட உதவியைத்தான் நேபாள மக்களும்,ஆட்சியும் விரும்புகிறது. அவர்கள் அப்படி கூறுவதில் நியாயம் இருக்கிறது. ஆகவே குறுகியகால திட்டத்தோடு சென்ற எங்களுக்கும் இம்முறை அங்கு ஊழியம் செய்த திருப்தியே ஏற்படவில்லை. இம்முறை எங்கள் நேபாள நாட்டின் மலைஅடிவார கிராம ஊழியம் மிகப்பெரிய தோல்வியாகத்தான் முடிந்தது. என் வாசகர்களுக்கு நான் என் தோல்வியை மறைக்கவிரும்பவில்லை.

## தோல்வியில் ஒரு ஆறுதல்:

‘ முதல்நாள் ஊழியத்தில் தோல்வியடைந்த எங்களுக்கு இரண்டாம் நாள் ஊழியம் பெருத்த ஜெயமானது. நாங்கள் பாடினாலும் அம்மக்கள் கவனிக்கவிரும்பவில்லை. சுவிசேஷம் அறிவித்தால் ஒருவராவது நின்று கேட்க விரும்பவில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில் எங்களோடு உத்திரபிரசேத்திலிருந்து இயேசுவை இரட்சகராக ஏற்றுக்கொண்ட இஸ்லாமிய(முஸ்லீம்)மதத்தை சேர்ந்த ஷியா இனத்தை சேர்ந்த அப்துல் ரஷித் என்ற சகோதரர் எழுந்து நின்று நான் ஒரு முஸ்லீம் என் பெயர் அப்துல் ரஷித் எங்கள் குடும்பம் வசதியான குடும்பம். ஒரு பெரிய காரில் நான் என் தாய்,தகப்பன், என் மனைவி என் மூன்று வாலிப பிள்ளைகள் பயணம் செய்துகொண்டிருந்தபோது தூக்க கலகத்தில் என் கட்டுபாட்டிலிருந்து கார் விலகி படுபாதாளத்தில் விழுந்து நொறிங்கியது. பிறகு என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. சுமார் 20 நாட்கள் கழித்தபின் எனக்கு சுயநினைவு வந்தது. இப்படி அவர் தன் சாட்சியை விளக்கிக் கொண்டிருக்கும்போது ஆங்காங்கு நின்றவர்கள் மரத்தடியில் எங்கள் முன்வந்து கதைகேட்கும் ஆவலில் வந்து அமர்ந்துக்கொண்டார்கள். வரவர கூட்டம் பெருங்கூட்டமானது. தாமதித்துவந்த மக்கள் கதையை முதலிலிருந்து கூறுங்கள் என்றார்கள். அந்த சகோதரனும் சளைக்காமல் முதலிலிருந்தே சம்பவத்தை கூறினார். விபத்தில் நான் மட்டும் உயிர்பிழைத்திருந்தேன். என் கார் டிரைவிங் லைசன்ஸ் பார்த்தவர்கள் நான் ஒரு முஸ்லீம் என்பதை அறிந்து அருகே உள்ள இஸ்லாமிய பள்ளி வாசலில் உள்ள இஸ்லாமிய நண்பர்களிடம்கூற நிறைய முஸ்லீம் நண்பர்கள் என்னை ஆஸ்பத்திரியில்சேர்த்து என் வைத்திய செலவுக்கு நல்லஉதவிசெய்து,இரவு-பகலும் அருகே அமர்ந்து என்னை அன்புடன் கவனித்துக் கொண்டார்கள். என் குடும்பம் முழுவதும் இறந்துப்போனதை அவர்கள் எனக்கு அறிவிக்கவில்லை. 23 நாட்கள் கழித்துதான் மரணவிவரம் அறிவித்தார்கள். லைசன்ஸ்ஸில் உள்ள விலாசத்தை கண்டபோது பல ஆயிரம் மைல்தூரத்தில் உங்கள் வீடு இருப்பதை அறிந்தோம்,போலீசுக்கு அறிவித்தோம். உறவினர் யாரும் வரவில்லை. ஆகவே நாங்களே முஸ்லீம் சகோதரர்களாக இணைந்து இஸ்லாமிய முறைப்படி இங்கேயே கபர்ஸ்தானில் உங்கள் குடும்பத்தை அடக்கம் செய்துவிட்டோம் என்றார்கள். என்னால் கதறிஅழ பெலம்இல்லாமல் மனத்திற்குள் அழுது தீர்த்தேன். ஒருநாள் நான் திரும்பி படுக்கும்போது வலி தாங்காமல் இயேசுவே என்று சத்தமாக கூறிவிட்டேன். அவ்வளவுதான் உதவி செய்தவர்கள் அத்தனை பேர்களும் என்னை சைத்தான் என்றுகூறி என்னை விட்டுசென்றுவிட்டனர். அதன்பிறகு யாருமே எனக்கு உதவிசெய்ய வரவில்லை. எப்படியோ சுகம் பெற்றேன். இன்றும் இயேசு ஜீவிக்கிறார் என்று என்னால் கூறமுடிகிறது என்றால் ஒரே காரணம். நான் ஆராதிக்கும் இயேசு என் உள்ளத்தில் இருப்பதால் தாழ்ந்திருக்கவும் எனக்கு பழக்கம் உண்டானது. பட்டினி கிடக்கவும், முறுமுறுப்பில்லாமல் வாழவும் பழக்கம் உண்டானது.

அதற்கு ஒரே காரணம் இயேசு. இப்போது சொல்லுங்கள் நீங்கள் பூகம்பத்தில் வீட்டை இழந்தீர்கள், குடும்பத்தில் சிலரை இழந்தீர்கள். இப்போது உங்களுக்கென்று சிலர் உங்களோடு இருக்கிறார்கள். ஆனால் எனக்கோ என் பெற்றோரை இழந்தேன். என் மனைவியை இழந்தேன். என் சந்ததி என்று கூற என்னோடு இருந்த வளர்ந்த 3வாலிப பிள்ளைகளை இழந்தேன். நான் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதால் என் உறவினர் என்னையும்,குடும்பத்தையும் ஜாதியிலிருந்து ஒதுக்கிவைத்துவிட்டனர். என்னை ஆறுதல்படுத்த என் குடும்பத்தில் ஒருவர்கூட இல்லை. இப்போது சொல்லுங்கள். உங்கள் துக்கம் பெரிதா? என் துக்கம் இழப்பும் துக்கமும் பெரிதா? நான் வணங்கும் இயேசு ஏன் என்னை காப்பாற்றவில்லை என்று எனக்கு கடவுளிடம் கேட்க தோன்றவில்லையே? காரணம், உலகம் தராத சமாதானம்(குடும்பம், பணம்,பதவி) எதுவும் தராத சமாதானம் இயேசுகிறிஸ்து மட்டுமே கொடுக்கமுடியும். அந்த சந்தோஷத்தை உங்களுக்கு அறிவிக்கவே இந்த குழுவினரோடு நானும் வந்தேன் என்றார்.

எல்லாரும் மிகுந்த அமைதியாய் அந்த முஸ்லீம் சகோதரன் கூறியதை கேட்டார்கள். அதன்பின் நான் பேசியதை மொழிபெயர்த்தார்கள். கரம் கூப்பினார்கள். **(ஈசுமசி) இயேசு தெய்வத்திடம்** எங்களோடு சேர்ந்து ஜெபம் செய்தார்கள். நிச்சயம் அந்த கேம்பில் ஒரு சிலராவது தொடப்பட்டிருப்பார்கள் என்று நம்புகிறேன். 40நிமிடம் அந்த இடத்தில் நடந்த ஊழியம்மட்டும் வெற்றி என்று கூறி சமாதானம் அடைந்தோம். கூடவந்த அந்த முஸ்லீம் சகோதரனின் சாட்சியை தொடர்ந்து நான் அந்த மக்களோடு பேசினேன். லூக் 22:31,32,33 வசனங்கள் **நீ பெலப்பட்ட பின்பு உன் சகோதரர்களை தேற்றுவாயாக** என்று பேதுருவிடம் இயேசு கூறியதின் விளக்கத்தை கூறினேன். பிறகு தமிழ்நாடு திரும்பினோம். மற்றவர்களுக்கு பிரயோஜனமாவதற்காவே சிலசமயம் கர்த்தர் தன் பிள்ளைகளை நெருக்கத்தின் வழியாக,தோல்வியின் வழியாக,மரணவேதனையின் வழியாக கர்த்தர் நடத்துகிறார். புல 3:33. **மனபூர்வமாய் கர்த்தர் மனுஷனை சிறுமையாக்கி சஞ்சலப்படுத்துவதில்லை.** இப்படிப்பட்ட வேதனைகளில் நமக்காக காரணமில்லாமல் பாடுபட்ட அவரையே நோக்கிபாருங்கள் என்று பவுல் கூறுகிறார். எத்தனை உண்மை.

‘ மனந்திரும்பின அனுபவம்உள்ளவர்களாகஇருந்தால் எந்த பிரச்சனையிலும்,குடும்பத்தில் மரணம் ஏற்பட்டாலும் ஏன் என்ற கேள்வி கேட்கமாட்டார்கள். ஏன் என்ற கேள்விக்கு வேதத்தில் பதில் இல்லை.

‘ இம்முறை ஜாமக்காரனில் வெளிவந்த சில சாட்சிகள் உங்களுக்கு பிரயோஜனமானதாக அமையும் என்று நம்புகிறேன்.

‘ **என்னோடுபோன்னில்** தொடர்புக்கொள்ள முயலுவதைவிட உங்கள் பிரச்சனைகளை, ஜெப தேவைகளை எனக்கு **கடிதம்**வழியாக அறிவியுங்கள். வாரத்தில் இரண்டு நாட்களில் எல்லாரோடு ஒரே நேரத்தில் போன்வழியாக பேசமுடியவில்லை,ஆலோசனைக்கூறவும் முடியவில்லை. அதனால் பலர் ஏமாற்றம் அடைகிறார்கள். உங்கள் பிரச்சனைகளை உங்ள் கேள்விகளை தெரிவிக்க கடிதம் எழுதுங்கள் நானே ஜெபித்து பதில் எழுதுவேன். பதில் தாமதமாகத்தான் எழுதுவேன். என்றாலும் கடிதம் கிடைத்தவுடன் ஜெபம் ஏறெடுக்கப்படும் -பதில் தாமதமாக நானே என் கைபட பதில் எழுதுவேன்.

‘ **ஆன்-லைனில்** காணிக்கை அனுப்பகிறவர்கள் தயவுசெய்து உங்கள் **விலாசம், தொலைபேசி** எண் ஆகியவைகளை ஒவ்வொரு முறையும் எனக்கு எழுதி அனுப்புங்கள். எந்த பேங்கில் எவ்வளவு அனுப்பினீர்கள் என்பதையும் குறிப்பிட்டு எழுதுங்கள். மணியாடர்,இ-மெயில்,ஆன்-லைன் மூலமாக காணிக்கை அனுப்பிய யாவருக்கும் என்னுடைய வாழ்த்துதல்களையும்,நன்றியையும் அறிவிக்கிறேன்.

‘ தொடர்ந்து உங்கள் அனைவருக்காவும் ஜெபிக்கிறேன். கர்த்தரின் கிருபை உங்கள் அனைவரோடும் இருப்பதாக.

கர்த்தரின் உன்னத பணியில்

**டாக்டர்.புஷ்பராஜ்**

# கர்த்தரின் இரண்டு ஆயுதங்கள்

## திரும்பி பார்க்கிறேன் - நெ. 11

**கர்த்தர்தாம்** நேசிக்கும் **விசுவாசிகளை மரணம்வரை** விழாமல் வழிநடத்த ஆசைப்படுகிறார்.

மனிதன் எப்படிப்பட்டவனாக இருந்தாலும் ஊழியனாக இருந்தாலும் விசுவாசியாக இருந்தாலும் பல சந்தர்பங்களில் அவன் பெலவீனங்களை அவன் அறியாமல் விழுந்துபோகிறான். பலமுறை கர்த்தர்தான் நேசிக்கும் மனிதனின் சில செயல்களை கண்டு மனவேதனைப்படுகிறார்.

உலக ஆரம்பத்திலேயே மனிதனை ஆசைஆசையாய் உண்டாக்கியபின் தான் என்ன நோக்கத்தோடு மனிதனை உண்டாக்கினாரோ அந்த நோக்கத்தை நிறைவேற்றாததால் மனிதன் தன் கிழ்ப்படியாத பாவத்தால் தன்னை உண்டாக்கிய தேவனின் மனதையே நோகடித்து விடுகிறான்.ஆதி 6:6ல் (தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காகக் கர்த்தர் மனஸ்தாபப் பட்டார்.அது அவர் இருதயத்துக்கு விசனமாயிருந்தது.)மனிதனை ஏன்தான் உண்டாக்கினேனோ என்று கர்த்தர் துக்கப்பட்டதாக எழுதியிருக்கிறது. ஆவிக்குரிய ஜீவியத்தில் வளரும்போது சின்னசின்ன கீழ்படியாமைக்கூட ஆண்டவரின் மனதை துக்கப்படுத்திவிடும்.

கிழே என் தனிப்பட்ட வாழ்க்கையில் நடந்த ஒரு சம்பவத்தை வாசகர்களாகிய உங்களுக்கு அறிவிக்கிறேன். இந்த சம்பவத்தை சில இடங்களில் நான் பிரசங்கித்த கன்வென்ஷன்களில் கூறியிருக்கிறேன்.

என் எல்லா பிரசங்கத்திலும் நான் மறக்காமல் கூறுவது தேவனின் **இரண்டு ஆயுதங்கள்** பற்றியாகும். இந்த ஆயுதங்களை கர்த்தர் தான்நேசிப்பவர்களை கொல்வதற்க்குஅல்ல திருத்தவதற்கு உபரியாகப்படுத்தும் ஆயுதங்களாகும்.

1. **கிருபையின் ஆயுதம்**
2. **சிட்சையின் ஆயுதம்**

பாவம் செய்யும் மனிதனோடு **பிரசங்கம்** மூலமாக **வசனத்தின்** மூலமாக **வேதம்** வாசிக்கும் போதும் கர்த்தர் மனிதனோடு பேசி பார்ப்பார் அல்லது உணர்த்துவார். இதுதான் கிருபையின் ஆயுதம். இதற்கு கீழ்படிந்து நாம் நம்மை சரிபடுத்திக்கொன்டால் நல்லது. பெற்றோர்மூலம் ஆலோசனைக் கூறுவார். ஊழியர்கள்மூலம் ஆலோசனை கூறுவார். தினசரி வேதம் வாசிக்கும்போது வசனத்தின்மூலம் பேசி உணர்த்துவார். நாம் அதற்கு செவி சாய்க்காமல் போனால்,கீழ்படியாமல்போனால் நம்மை திருத்திக்கொள்ளாமல்போனால் அப்போதுதான் தன்னுடைய **இரண்டாம்** ஆயதமான **சிட்சையின்** ஆயுதத்தை கர்த்தர் கையில் எடுப்பார். சிலசமயம் அது பயங்கரமாக இருக்கும். அந்த இரண்டாம் ஆயுதம் சிலருக்கு தோல்வியாக இருக்கும் ஏமாற்றமாகவும் இருக்கும். பெருத்த வியாபார நஷ்டமாகவும் இருக்கும். சில சமயம் நாம் மிகவும் நேசிக்கும் மகள்-மகன் பெற்றோர்,மனைவி,கணவன் ஆகியோரின் மரணத்தின் மூலமாகவும் பேசுவார். இப்படிப்பட்ட மரணத்தின்மூலமாக அதன் காரணமாக நமக்கு ஏற்படும் வேதனைமூலமாக கர்ததர் நம்மோடு பேசுகிறார் என்று நாம் புரிந்துகொண்டு நம்மை சரிப்படுத்திக்கொண்டால் வீட்டில் உண்டான அந்த மரண சூழ்நிலையில்கூட நம்மால் கர்த்தரை துதிக்க முடியும். நாம் நம்மை சரிபடுத்திக்கொண்டால் நஷ்டங்களை ஜெயமாக கர்த்தர் மாற்றுவார்.

# என் மனைவியின் மரணப்படுக்கையின் மூலம் என்னோடு பேசிய தேவன்

1964ம் வருடம் நான் இரட்சிக்கப்பட்டேன். மனம்திரும்புதலின் அனுபவத்தை பெற்றேன். மனந்திரும்பிய சில வாரங்களிலேயே என் டாக்டர் தொழிலோடு இணைந்து கவிசேஷ ஊழியம் செய்யும் பாக்கியமும் எனக்கு கிடைத்தது. FEBA சத்தியவசனம் (BACK TO THE BIBLE(SRI LANKA) ஆகிய வானொலி நிகழச்சிகளில் நான் தொடர்ந்து வேதபாடம் நடத்த ஆரம்பித்தவுடன் இந்தியாவிலும்,வெளிநாடுகளில் நான் பிரபலமானேன். கன்வென்ஷன் பிரசங்கியாக உபயோகிக்கப்பட்டேன்.

ஒவ்வொரு கூட்டத்திலும் ஆயிரக்கணக்கில் மக்கள் இரட்சிக்கப்பட்டனர். ஆயிரக் கணக்கில் மனந்திரும்பினர். ஒவ்வொரு கூட்டத்திலும் மக்கள் பல்வேறு வியாதிகளிலிருந்து பிசாசின் பிடியிலிருந்தும் விடுவிக்கப்பட்டனர். குறுகிய காலத்தில் இந்தியாவில் எல்லா மாநிலங்களிலும் கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரை பிரபல பிரசங்கியாக அறியப்பட்டேன். 162 உலக நாடுகளில் கர்த்தர் என்னை கிருபையாக உபயோகித்தார்.

1970ல் எனக்கு திருமணமானது. என் மனைவி சேலம் அரசாங்க ஆஸ்பத்திரியில் பணியாற்றிக்கொண்டிருந்தார். கோயமுத்தூர் CSI டையாசிஸ்ஸில் ஆயராக பணியாற்றிய மறைந்த **Rev.நோயல்,**CSI பள்ளி ஆசிரியையாக பணியாற்றிய **திருமதி.இசபெல்லா** அவர்களின் இரண்டாவது மகள் **திருமதி.மங்களவதனி** அவர்கள்தான் என் மனைவியானார்.

1971ல் முதல்பிள்ளையாக மகன் **சாமுவேல்** பிறந்தார். 1974ல் மகள் **ஷீபா இவாஞ்சலின்** பிறந்தார். மகள் பிறந்த சில வாரங்களில் என் மனைவி தலைவலியால் துடித்துபோனார். இந்த தலைவலி பல வருடங்களாக என் மனைவிக்கு இருந்தது. மகள் பிறந்தபின் அந்த வலி மிக அதிகமானது. தாங்ககூடாததாக மாறியவுடன் வெல்லூர் CMC ஆஸ்பத்திரிக்கு அழைத்துசென்று அந்த தலைவலிக்கான காரணத்தை கண்டுபிடிக்கலாம் என்று தீர்மானித்தேன். அதற்குமுன் சேலம் அரசாங்க மருத்துமனை தலைமை(DMO) டாக்டரிடம் காட்டி நீண்டநாள் விடுப்பில் செல்ல ஏற்பாடு செய்ய என் மனைவியை அழைத்து சென்றேன். DMO அவர்கள் என் நண்பரும், தேவ பக்தியள்ள நல்ல கிறிஸ்தவரானதால் அவர் வீட்டுக்கே என் மனைவியை அழைத்து சென்றேன். அவர் என்னிடம் கூறியபோது நீங்கள் CMCசென்றால் மூளைபரிசோதனை, மற்ற பரிசோதனை களைச்செய்ய அதிக பணம் செலவாகும். ஆகவே இலவசமாக அரசாங்க ஆஸ்பத்திரியிலேயே எல்லா பரிசோதனைகளையும் முடித்துகொண்டு செல்வதுதான் நல்லது என்றார். உடனே சேலம் அரசாங்க ஆஸ்பத்திரியில் என் மனைவியை சேர்த்தேன். பரிசோதனைகள் நடக்க ஆரம்பித்தது. என் மனைவியை ஆஸ்பத்திரியில் சேர்த்தவுடன் நான் என்னுடைய ஆஸ்பத்திரி வேலைக்கு **டேனிஷ்பேட்டைக்கும்,சொந்த கிளீனிக்குக்கும்(**Clinic)வியாதியஸ்தர்களை கவனிக்க சென்று விட்டேன்.

அன்று மாலை சேலம் திரும்பினேன். என் மனைவியை பார்க்க நேராக ஆஸ்பத்திரிக்கு சென்றேன். ஆஸ்பத்திரியில் என் மனைவி படுத்திருக்கும் அறைக்குமுன் ஏராளமான ஆட்கள் கூட்டம் நிற்பதைக்கண்டேன். சேலத்திலிருந்த CSIஆலய ஆயர்களும் அங்கு நின்றுக் கொண்டிருந்தார்கள். பெந்தகோஸ்தே சபை பாஸ்டர்கள்,சபை ஊழியர்களும்,சபை மக்களும் கூட்டமாக நின்று பேசிக்கொண்டிருந்திருப்பதைக் கண்டேன். என் மனைவி மரித்துப் போயிருப்பாரோ என்ற பயம் மனதின் உள்ளே,யாரிடமும் பேசாமல் வேகவேகமாக நோயாளி அறைக்குள் சென்றேன். **மனைவி மரிக்கவில்லை**, ஆனால் **சுயநினைவு இன்றி** இரண்டு

கைகளிலும் விதவிதமான பாட்டில் மருந்துகளை நரம்பு வழியாக ஏற்றிக் கொண்டியிருந்தார்கள். பல டாக்டர்கள் மனைவியின் படுக்கையை சுற்றி நின்றுக் கொண்டிருந்தார்கள். அருகே சில மருத்துவ கருவிகளை பார்த்தபடி டாக்டர்கள் நின்று கொண்டிருந்தனர் . மனைவியின் நிலைமை மோசமாகிக்கொண்டேபோனது.

இரவு சுமார் 8 மணி இரண்டு டாக்டர்கள் என்னிடம் தனியாக வந்து உங்கள் மனைவி உயிர் பிழைப்பது கடினம். ஆகவே யார் யாருக்கு உறவினர்களுக்கு அறிவிக்க வேண்டுமோ அறிவித்துவிடுங்கள் என்றார்கள். மனைவியின் கடைசி கட்டம் அது என்பதை விளங்கிகொண்டேன். நான் தபால் ஆபீஸ் சென்று தந்திமூலம் செய்தி அறிக்கப்போனேன். இரவு 10மணிக்கு ஆஸ்பத்திரிக்கு திரும்பி வந்தேன். அப்போது ஒரு டாக்டர் அறையைவிட்டு வெளியே வந்து உங்கள் மனைவியின் இரத்தம் உரைய ஆரம்பித்துள்ளது. ஆகவே நரம்பு வழியாக உள்ளே மருந்துகள் போகவில்லை என்றார்.

## என்ன நடந்தது?.

நான் அன்று காலை சேலம் அரசாங்க மருத்துவமனையில் என் மனைவியை பரிசோதனை நடத்த ஏற்பாடு செய்துவிட்டேன். மனைவியின் மூளை பரிசோதனை மற்ற பரிசோதனை யாவும் முடிந்துவிட்டது. அன்று மதியம் திடீர் என்று என் மனைவிக்கு தலைவலி மிக அதிகமானது. அப்போது டூட்டியிலிருந்த டாக்டர் வலி நிவாரண மருந்தான **நோவாலிஜன்** என்று ஊசி மருந்தை மனைவியின் உடலில் செலுத்தினார்கள். ஆனால் அந்த மருந்து என் மனைவிக்கு அலர்ஜியை (ஒவ்வாமை)உண்டாக்கி நினைவிழந்து போகவைத்துவிட்டது. இருதய துடிப்பும் குறைய ஆரம்பித்துவிட்டது. உடனே அனைத்து சிறப்பு டாக்டர்களும், தலைமை மருத்துவரும் DMOவுடன் இணைந்து செயற்கைமுறையில் இருதய துடிப்பை துடிக்க செய்ய பல முயற்சிகளை மேற்கொண்டார்கள்.முடியவில்லை!. மற்றொரு சிறப்பு டாக்டர் வரவழைக்கப்பட்டார். அப்போது தான் இரண்டு கைகளிலும் விதவிதமான மருந்துகளை செலுத்த ஆரம்பித்தனர். அதன் கடைசி கட்டமாகதான் அன்று இரவு 12.30மணிக்கு என்னை அழைத்து நாடி நின்றுபோகும்நிலை வந்துவிட்டதாக என்னிடம் அறிவித்தார்கள்.

என் மனைவியின் கடைசி அத்தியாயம் எழுதப்படுகிறது என்பதை உணர்ந்தேன். மனைவியின் கட்டிலின் மறுபக்கம் என் மாமியார் கையில் என் இரண்டாவதாக பிறந்த பச்சிளம் குழந்தையை பிடித்துக்கொண்டு எல்லாரும் அழுதுக்கொண்டிருந்த காட்சி என் மனதை உலுக்கியது.

எங்காவது தனியாக உட்கார்ந்து கர்த்தரிடம் வாய்விட்டு அழவேண்டும் என்று அலைந்தேன். ஆனால் என்கூடவே இருந்த ஊழியர்கள்,ஆயர்கள் அனைவரும் என்னை தனிமையில்விடா மனமில்லாமல் என்கூடவே வருகிறார்கள். தனிமையில் ஜெபிக்க எப்படி இவர்களை விட்டுவிலகுவது என்று புரியாமல் தவித்தேன்.

அப்போது அரசாங்க ஆஸ்பத்திரியின் பொது கழிப்பிடம்(TOILET) கண்டேன். யாரும் என்னை பின்பற்றி வரக்கூடாத இடமாக அதை தெரிந்துக்கொண்டேன். கழிப்பிடத்தின் கதவை சாத்தினேன். பொதுமக்கள் உபயோகிக்கும் பொது கழிப்பிடம் எப்படியிருக்கும் என்று அறிவீர்கள்.

கால்வைக்க இடம் இல்லாமல் பல இடத்தில் மனித கழிவுகள் அதன் மத்தியில் நான் நின்ற வண்ணம் கழிவு இல்லாத இடமாக பார்த்து என் காலைவைத்து அங்கே நின்றவண்ணம் கை கூப்பி என்னை தெரிந்தெடுத்த தெய்வமாகிய என் இயேசுகிறிஸ்துவிடம் கெஞ்சி மன்றாடினேன்.

' கர்த்தாவே, 1964ம் வருடம் முதல் உம்முடைய ஊழியத்துக்காக என் தொழிலில் அதிக பணம் சம்பாதிக்கும் எண்ணம்இல்லாமல் உம்முடைய ஊழியத்துக்கு அதிக நாட்களை ஒதுக்கினேனே!. பல மலைகளில் ஏறி காட்டுக்குள் தங்கி நான் செய்த அந்த கடின ஊழியத்தை நினைத்திரும். என் கூட்டத்தில் எத்தனையோ **ஆயிரம் மக்கள் இரட்சிக்கப்பட்டார்களே!. எத்தனை ஆயிரம்பேர் சுகம்** பெற்றார்களே!. அவைகளை நினைத்து பார்த்தாவது என் மனைவியை காப்பாற்றமாட்டீரா? என்று அழுதேன். நான் என் மனைவியை இப்போது மரிக்க கொடுத்தால் என் இரண்டு குழந்தைகளை வைத்துக்கொண்டு எப்படி உம் ஊழியத்தை செய்வேன். என் வாழ்க்கையில் ஏதாவது தவறு இருந்தால் அல்லது உம் மனதை வேதனைப்படுத்தும் விஷயம் ஏதாவது இருந்தால் தயவுசெய்து கூறும் ஆண்டவரே! நான் அதை சரிப்படுத்துவேன். இந்த ஒருவிசை என் மனைவியின் **உயிரை பிச்சையாக** கேட்கிறேன். **மனம் இரங்குவீராக** என்று கதறி அழுதேன்.

அப்போது அந்த நாற்றம் எடுத்த கழிவறையில் **பரிசுத்த தேவனின்** பிரசன்னத்தை உணர்ந்தேன். என் கர்த்தர் மனித கழிவுகளின் நாற்றத்தை பார்க்கவில்லை. ஆனால் என் இருதயத்தின் ஆழத்தை பார்த்தார். என் கதறுதலை கண்டார். உடனே கர்த்தர் என்னோடு இடைப்பட்டார். மகனே!,முதலாவது உன் இருதயத்தில் உள்ள **பெருமையை,அகம்பாவத்தை, கர்வத்தை** உன்னிலிருந்து நீக்கிபோடு என்றார்.

ஆயிரக்கணக்கான மக்கள் உன் கூட்டத்தில் **இரட்சிக்கப்பட்டது,மனம்திரும்பியது உன் பிரசங்கத்தால்தான் என்றா! எண்ணுகிறாய்.** அந்த பெருமையை முதலில் உன் உள்ளத்திலிருந்து நீக்கிபோடு. மக்கள் இரட்சிக்கப்பட்டது என் வசனத்தால்தான் நீ பிரசங்கத்தில் உபயோகித்தது என் வசனம் ஆகும். மக்கள் என் வசனத்தை கேட்டார்கள். **எச்சரிப்பை** உணர்ந்தார்கள்!. மனந்திரும்பி என்னை நோக்கி அழுதார்கள்!. நான் அவர்களை இரட்சித்தேன். என் வசனம் கிரியை அவர்களில் செய்தது, என் வசனம் கிரியை செய்யாமல் ஒரு நாளும் என்னிடம் அது திரும்பி வராது என்று உனக்கு தெரியாதா?.

**ஆயிரக்கணக்கான மக்கள் சுகமானர்கள் என்றாயே!** உன் ஜெபத்தால்தான் அவர்கள் சுகம் பெற்றார்கள் என்றா நினைக்கிறாய்? ஒரு கூட்ட மக்கள் மனந்திரும்பி என் வசனத்துக்கு கீழ்ப்படிந்தார்கள். நான் அவர்களை சுகமாக்கினேன்.(சங் 107:20). அவர் தமது வசனத்தை அனுப்பி அவர்களை சுகமாக்கினார். இவர்கள் பெற்ற சுகத்துக்கும் உனக்கும் என்ன சம்பந்தம்?. இந்த **பாவம் பெருமையை உன்னிலிருந்து நீக்கிபோடு, உனக்குள் உள்ள கர்வத்தை நீக்கிபோடு** என்று வரிசையாக கர்த்தர் என்னை உணர்த்த உணர்த்த என் குறைகள் யாவும் எனக்கு புரிந்தது. ஆண்டவரே? நான் வெறும் கருவி மட்டுமே? என்பதை உணர்ந்துக்கொண்டேன். மக்கள் இரட்சிக்கப்பட்டதும்,சுகம்பெற்றதும் **உம் வசனத்தால்அன்றி, என் பிரசங்கத்தாலோ! என் ஜெபத்தாலோ! அல்ல** என்பதை ஒத்துக்கொள்கிறேன். அறிக்கையிடுகிறேன்.

நானே ஊழியர்களின் கூட்டத்தில் ஊழியர்களுக்கு பெருமை இருக்ககூடாது. அகம்பாவம் இருக்கக்கூடாது என்று பிரசங்கித்தேன். ஆனால் அந்த பெருமை, அகம்பாவம் யாவும் எனக்குள்ளேயே மறைமுக இருப்பதை உணர்த்தினீரே! நன்றி!. உணர்ந்துக்கொண்டேன். ஆண்டவரே! ஒத்துக்கொள்கிறேன்.ஆண்டவரே! இனி எல்லாத் துதியும் கனமும், மகிமையும் உமக்கே உரியது!. இந்த ஒரே ஒருமுறை என்னை மன்னித்து எனக்கு ஒரு சான்ஸ் தாரும்! என் மனைவியை வாழவையும் என்று கெஞ்சினேன்.

அப்போது சிலர் என் **கழிவறை** கதவைத்தட்டி டாக்டர் உங்கள் மனைவி பிழைத்துக் கொண்டார். நாடி துடிப்பு பெலப்பட தொடங்கிவிட்டது. நாடி எண்ணிக்கை கூட ஆரம்பித்துவிட்டது

உங்களை டாக்டர்கள் அழைக்கிறார்கள் வாருங்கள் என்றார்கள்.

உடனே ஆண்டவரிடம் நன்றி கர்த்தாவே என் ஜெபத்தை!,என் விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்டீரே!. நன்றி ராஜா!. இதோடு என் ஜெபத்தை முடிக்கிறேன்!. திரும்பி வந்து மறுபடியும் உம்மிடம் பேசுவேன்! என்று கூறி ஜெபத்தை நிறுத்தி கதவை திறந்து என் மனைவியின் அறைக்கு ஓடினேன்.

எல்லா டாக்டர்களும் சூழந்து நின்றிருந்தார்கள். நான் என் மனைவியின் கால் அருகே நின்றேன். என் மனைவியின் மரண படுக்கைக்கு காரணம் நான்தான் என்பது எனக்கும், என் ஆண்டவருக்கும் மட்டுமே தெரியும். சற்று நேரத்துக்கு முன்தான் என் மனைவியின் மரண படுக்கையின் காரணத்தை கர்த்தருக்கு முன்பாக நான் சரிப்படுத்தினேன். நிச்சயம் என் மனைவி உயிர் பிழைத்துவிடுவார்!.

சில நிமிடங்களுக்கு பிறகு என் **மனைவி கண்களை** திறந்தார். என் மனைவியின் கண்களின் கருவிழிகள் மட்டும் கூட்டத்தை சுழன்று நோக்கின. கால் அருகே நிற்க்கும் என்னை கண்டார். தன் அருகே வரும்படி கண்கள் மூலமாக சைகை காட்டினார். எல்லாரையும் விலக்கி அவர் அருகே சென்றேன். ஏதோ, சொல்ல முயலுகிறார் என்பதை உணர்ந்தேன். அவர் வாயருகே என் காதை கொடுத்துகேட்டேன். அப்போது அவர் கூறினார் நாளை நீங்கள் மதுரை கன்வென்ஷனுக்கு போகவேண்டுமே ஞாபகமிருக்கிறதா? இங்கு என்ன செய்கிறீர்கள் என்றார்.

என் ஆண்டவரை மனதார துதித்தேன். தான் படுத்திருக்கும் நிலை, **மரணபடுக்கை** என்று அவர் அறிந்தும் **என் ஊழியத்தை** எனக்கு ஞாபகப்படுத்திய அவரின் பொறுப்பு. என்னை மிகவும் அதிகம் எனக்கு கிடைத்த ஆவிக்குரிய மனைவிக்காக ஆண்டவரை துதிக்க வைத்தது. ஒருவனுக்கு இரட்சிக்கப்பட்ட மனைவி கிடைக்கும் பாக்கியம் வாழ்க்கையில் மிகவும் உயர்ந்தது. அந்த வகையில் நான் பாக்கியசாலி என்று கூறுவதில் நான் பெருமையடைகிறேன். இரண்டு நாட்களில் பூரண சுகம் பெற்று ஆஸ்பத்திரியிலிருந்து என் மனைவியை வீட்டுக்கு அழைத்து வந்தேன்.

' அன்பான வாசகர்களே!, ஊழியர்களே! 1964ம் வருடம் நான் மனந்திருமபி இரட்சிப்பை பெற்று ஊழியக்காரனாக பல வருடம் ஊழியம் செய்துகொண்டிருந்த என்னை சரிப்படுத்தவும் என் குற்றத்தை எனக்கு உணர்த்தவும் என் ஆண்டவர் தன் கையில் எடுத்த தன் **இரண்டாம் ஆயுதத்தை** கண்டீர்களா?.

1964ம் வருடத்துக்குமுன் நான் இந்திய ராணுவத்திலிருந்தபோதும் அதற்கு முன்பும் நான் தெரிந்தே பல வித பாவம் செய்தபோது எனக்கு இவ்வளவு பெரிய தண்டனை இல்லை. பாவம் செய்ய ஒரு வேனில் பயணம் செய்தபோது வேனின் பின் சக்கரம்(ஆக்ஸல்) முறிந்து சக்கரம் தனியாக கழன்றுஓட வேன் கவிழ்ந்தது. கதவு அருகே முன்புறம் அமர்ந்திருந்த கிளீனர் பையன் மரித்தான். வாகனத்தை ஒட்டிய டிரைவரின் காது கிழிந்தது. ஆனால் நடுவில் அமர்ந்திருந்த **எனக்கோ** ஒரு சிறு கீரலும் இல்லாமல் வாகனத்தின்முன் உள்ள கண்ணாடியை என் காலால் எட்டி உதைத்து அதை உடைத்து வெளியே வந்தேன். ஒரு சிராய்ப்புக்கூட இல்லாமல் முழுமையாக காப்பாற்றப்பட்டேன். அப்போதெல்லாம் இத்தனை பெரிய தண்டனையான இரண்டாம் ஆயுதத்தை தேவன் எனக்கு எதிராக உபயோகிக்கவில்லையே? ஏன்? பல ஆண்டுகள் இந்த கேள்விக்கு பதில் கிடைக்கவில்லை. நானும் அதை பெரிதாக நினைக்கவுமில்லை. ஆனால் மனந்திரும்பி ஊழியக்காராக கர்த்தரால் உபயோகப்படுத்தப்பட்டு கொண்டிருந்த நிலையில் ஒரு சாதாரண பெருமை,அகம்பாவம்,கர்வத்தை உணர்த்தவா என் மனைவியின் மரணபடுக்கை என்ற **ஆயுதத்தை** கர்த்தர் உபயோகித்தார்? இது என்னை மிகவும் ஆழமாக யோசிக்க வைத்தது.

வேதம் கூறுகிறது: **அறிந்திருந்தும் தவறு செய்கிறவன் அநேக அடிகள் அடிக்கப்படுவான்.** ஆம். வெள்ளை துணியில் ஒரு துளி மை ஒட்டிக்கொண்டால் பளிச்சென்று அந்த கறை தெரியும். கருப்பு துணியில் எத்தனை கறைபட்டாலும் அது நம் கண்களுக்கு தெரியாது. அதைப்போல் கர்த்தருடைய பார்வை மிகவும் வித்தியாசமானது. நாம் மனந்திரும்பி கர்த்தரின் பணியை செய்து மற்றவர்களுக்கு ஆலோசனை கூறும்அளவு உயர்ந்த நிலையை அடையும்போது ஒரு சிறு தவறுகளும் குற்றங்களும் ஆண்டவரின் பார்வையில் மிகப்பெரிதாக தோன்றும். அதனால்தான் வெளிப்படுத்தன விசேஷத்தில் கர்த்தர் கூறுகிறார். **பரிசுத்தமாக இருப்பவன் இன்னும் பரிசுத்தமாகட்டும்** என்று நம் வேதத்தின் கடைசி புத்தகத்தில் கடைசி அத்தியாயத்தில் கர்த்தர் தன் வேதத்தை முழுவதும் எழுதி முடிக்கும்போது கடைசி வரியாக **ஆவியானவர் மூலம்** அந்த வார்த்தையை எழுதி முடிக்கிறார். வெளி 22:11.

அன்பானவர்களே, ஊழியக்காரனாகிய என் வாழ்க்கையில் இத்தனை வருடங்கள் கழித்து என்னை குற்றமற்றவனாக்க **சுத்தமான தங்கமாக** மாற்ற நெருப்பிலிட்டு தங்கத்தை புடமிடுவதைப்போல் என்னை திருத்த **என் மனைவியை ஆயுதமாக** உபயோகித்தாரே! இதை வாசிக்கிற உங்களில் யாராவது இன்னும் மனம் திரும்பாமல்போனால் தனியே சென்று பாவத்துக்கு மனம் வருந்தி கர்த்தரிடம் அறிக்கையிடுங்கள். அந்த நிமிடமே தன் இரத்ததால் உங்களைக்கழுவி சுத்தகரித்து உங்களை கர்த்தரைப்போல் மாற்றுவார். அவர் அதைத்தான் விரும்புகிறார். **நான் பரிசுத்தராக இருப்பதுபோல் நீங்களும் பரிசுத்தமாயிருக்க விரும்புகிறேன்** என்றார்.



**கர்த்தராகிய ஆண்டவரே, தேவரீர் என்னை இதுவரைக்கும் கொண்டுவந்ததற்கு, நான் எம்மாத்திரம்? என் வீடும் எம்மாத்திரம்?. 2 சாமுவேல் 7:18.**

**நான் பரிசுத்தர்** என்று உலகில் எந்த மதத்திலும் அவர்கள் வணங்கும் **எந்த தெய்வமும் நான் பரிசுத்தர்** என்ற வார்த்தையை வேதங்களிலோ,புராணங்களிலோ குறிப்பிட்டதாகவோ எழுதியதாகவோ யாராலும் கூறமுடியாது.

நம் தேவன் **பரிசுத்தர்.** ஆகவேதான் நம்மையும் பரிசுத்த வாழ்க்கை வாழ அழைக்கிறார்.

இதை வாசிக்கிற நீங்கள் எத்தனை வருட கிறிஸ்தவராக இருந்தாலும், ஆயராக, பிஷப்பாக,மாடரேட்டராக,கன்வென்ஷன் பிரசங்கியாக இருந்தாலும் எத்தனை லட்சங்கள் ஊழியத்துக்கு காணிக்கை கொடுத்திருந்தாலும் மிஷனரி பணிதளத்தில் எத்தனை ஆலயங்கள் கட்டியிருந்தாலும் நீங்கள் மனந்திரும்பாமல்போனால் நிச்சயம் பரலோகம் போகமுடியாது.

**பாவம் செய்துகொண்டே ஊழியம் செய்யமுடியும்.**

பாவம் செய்துகொண்டும், வசனத்தின்படி ஊழியம் செய்யாமலும், தீர்க்கதரிசனம் கூறமுடியும். ஜெபத்தில் **பொய்யாய் பெயர்களை** கர்த்தர் காட்டியதாக அறிவிக்க முடியும். அது சரியானதாக மேடையில் மக்கள்முன் காணப்படவும் செய்யும், பொய்யாய் பேசும் நீங்கள் ஜெபிக்கும்போது பிசாசு ஓடும். **அற்புதங்கள்** உங்கள் கூட்டத்தில் நடக்கும். ஆனால் **இயேசுவோ உங்களை நான் அறியேன்** என்பார்.

உங்களை **அக்கிரம செய்கைக்காரர்** என்று அழைப்பார். அதாவது கிரமமற்ற முறையில் வசன அடிப்படையில் அல்லாது எத்தனை அற்புதங்கள் உங்கள் ஊழியத்தில் காணப்பட்டதாக நீங்கள் சாட்சிகள் எழுதினாலும் உங்களை அக்கிரம செய்கைக்காரர் என்றுதான் அழைப்பார். **ஆவியானவரின்** பெயரை உபயோகித்து பாஷையே அல்லாத ஒன்றை **பாஷை** என்றும், **அக்கினி** என்றும், **அக்கினி அபிஷேகம்** என்றும் கவர்ச்சி வார்த்தைகளை உபயோகித்து மக்களை ஏமாற்றும் அனைத்து ஊழியர்களுக்கும், பாஸ்டர்களுக்கும் நான் கூறிக்கொள்ள விரும்புவது இதுதான். உங்களை திருத்திக்கொள்ளுங்கள். உங்கள் தவறான **தரிசனங்களை** புரிந்துக்கொள்ளுங்கள். **பரலோகம்** போகிறேன், **நரகம்** போய்வந்தேன் என்றால்லாம் நீங்கள் கூறும் பொய்களுக்கு ஒரு முற்றுப்புள்ளி வையுங்கள். நானும் உங்களைப்போன்ற ஊழியன்தான். கர்த்தர் என்னை சரிப்படுத்த உபயோகித்த **இரண்டாம் ஆயுதம்** உங்கள் வாழ்க்கையில் உபயோகிக்கும் வரை காத்திருக்கவேண்டாம். காலிழந்து, கையிழந்து,கண்இழந்து, பிள்ளையை பறிகொடுத்து மனைவி அல்லது புருஷன் அல்லது பெற்றோர் இறந்துப்போன பின் நீங்கள் மனந்திரும்பி என்ன பயன்?.

**நீ சுகமாய் வாழ்ந்திருக்கையில் நான் உனக்கு சொன்னேன் நீ கேளேன் என்றாய், உன் சிறு வயது முதலே நீ என் சத்தத்தைக் கேளாமல் போவதே உன் வழக்கம்.** எரே 22:21 என்று கர்த்தர் உங்களைப் பார்த்து கூறுகிறார்.

**நீ யாருக்கு அஞ்சி பயப்படுகிறாய்! நீ பொய் சொல்லுகிறாய்!** என்று கர்த்தர் ஏசா 57:11ல் கூறுகிறார். **அந்நியபாஷையில் பொய் தரிசனத்தில் பொய், சாட்சிகளில் பொய்.** ஜாக்கிறதை!. மறுபடியும் உங்களை எச்சரிக்கிறேன்.

**கடைசியாக கர்த்தர் கூறுவதை கவனியுங்கள்:**

**நான் வெகுகாலம் மவுனமாயிருந்தேன் அல்லவா**

**ஆகையால், நீ எனக்கு பயப்படாதிருக்கிறாய் ஏசா 57:11.**

**வெகு காலம் மவுனமாயிருந்தேன்**

**பயப்படாதிருக்கிறாய்** என்ற வார்த்தைகளை கவனியுங்கள். **ஆவியானவர் மனிதனோடு எப்போதும் போராடுவதில்லை** என்று வேதம் கூறுகிறது.

ஆகவே இதை வாசிக்கும் நீங்கள் யாராயிருந்தாலும் **மரிப்பதற்கு முன் மனந்திரும்புங்கள். மரித்தபின் மனம்திரும்ப வழியேயில்லை.** இப்போது நீங்கள் உயிரோடு இருந்து இதை வாசித்துக்கொண்டிருக்கிறீர்கள். இப்போதே மனந்திரும்பிவிடுங்கள்.

என் மனைவியின் மரண படுக்கை மூலமாக என்னை கர்த்தர் திருத்த முயற்சித்ததைப் போல் உங்கள் மனைவி மூலமாக உங்கள் **பிள்ளையின் மரண படுக்கையின்** மூலமாக, உங்கள் **கணவரின் மரணபடுக்கை** மூலமாக உங்களை உணர்த்தும் நிலை உருவாகவேண்டாம். உங்கள் தொழில் **பாதிக்கப்பட்டபின்**, பெரும் **கடன்காரர்கள்** உங்களை சூழ்ந்துகொண்டபின் கர்த்தரை தேட முயலவேண்டாம். அதுவரை காத்திருக்கவேண்டாம். **இன்றே இரட்சண்ய நாள்.**

உங்கள் மதுபான குடியை இன்றோடு நிறுத்திக்கொள்ளுங்கள். **ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் அவன் தேவனுடைய இராஜ்யத்தை காணமாட்டான்.** யோ 3:3

இதை வாசிக்கிற உங்கள் யாவருக்காவும் ஜெபிக்கிறேன். கர்த்தரின் **இரண்டாம் ஆயுதம்** உங்கள்மேல் உபயோகிக்காமல் இருக்க ஜெபிக்கிறேன்.

கர்த்தரை கண்டடைய தக்க சமயத்தில் அவரைத் தேடுங்கள். அவர் **சமீபமாயிருக்கும் போதே** அவரை நோக்கி கூப்பிடுங்கள். தேவனின் இரண்டாம் ஆயுதம்!· ஜாக்கிறதை!.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

# வாசகர்கள் கவனிக்கவும்

**1. குறைவான Stamp ஒட்டி அனுப்பும் பத்திரிக்கைகளை, கடிதங்களை, கவர்களை ஒரு சிலவற்றை மட்டும் திருப்பி அனுப்புகிறோம். காரணம் அனுப்புபவர்கள் அந்த தவறை சரிசெய்து கொண்டு கடிதத்தின் சரியான எடைக்கு ஏற்ப ஸ்டாம்ப் ஒட்டி அனுப்ப அது அவர்களுக்கு உதவும். இப்படி எழுதுவது உங்களை வேதனைப்படுத்தினால் பொருத்துக்கொள்ளவும். கவர் அனுப்புபவர்கள் Stamp ஒட்டி அனுப்பும்போது சரியான எடை பார்த்து, அதற்குறிய Stamp ஒட்டி அனுப்பவும்.**

**2. Book Post என Rs.4 தபால்தலை ஒட்டும்போது திருமண அழைப்பிதழ்களில், கையெழுத்துஇட்டோ அல்லது பேனாவில் எதையாவது எழுதினாலோ Due அல்லது அபராதம் (Fine) இடுவதால் தபால் அனுப்புபவர் எச்சரிக்கையாக அனுப்பவும்.**

**3. எங்களுடைய ஜாமக்காரன் உங்களுக்கு அல்லது அனுப்பப்படும்போது உங்களுக்கு அனுப்பும் எங்கள் கடிதங்கள் ஏதாவது காரணத்தால் தபால்துறையிலிருந்து due(fine) வசூலிக்கப்படும்போது அதை Refused என்று எழுதி தயவுசெய்து எங்களுக்கே திருப்பி அனுப்பவும். நாங்களும் எங்களை சரி செய்ய அது உதவியாக இருக்கும்.**

**4. பேங்க் வழியாக, Emo-மூலமாக காணிக்கை அனுப்புபவர்கள் தயவுசெய்து இ-மெயில் மூலமாகவோ, தொலைப்பேசி மூலமாகவோ, கடிதம்மூலமாகவோ, பேக்ஸ்மூலமாகவோ நீங்கள் காணிக்கை அனுப்பிய தேதி-தொகை-எந்த பேங்க் என்ற விவரத்தை எங்களுக்கு தெரிவித்தால் நல்லது. பேங்க் பாஸ்புக்கில் எங்கிருந்து அந்த தொகை வந்தது!, யார் அனுப்பியது! போன்ற விவரங்களை பேங்க் பாஸ்புக்மூலம் அறிய முடிகிறதில்லை. ஆகவே நீங்கள் காணிக்கையை பேங்க்மூலமாக என் அக்கவுண்ட்டுக்கு அனுப்பிய உடனே எங்களுக்கு தெரிவித்து விடுங்கள். இவ்விஷயத்தில் ஒத்துழைப்பு தந்தால் அரசாங்கத்துக்கு கணக்கு காட்டும்போது அவர்கள் எங்களை குற்றம் சாட்ட முடியாதபடியிருக்க உங்கள் அறிவிப்பு உதவியாக அமையும்.**




2015 ஜீன் மாதம் 22ம்தேதி இந்தியாவிலும்,உலகமனைத்திலும் யோகா தினம் அனுசரிக்கப்பட்டதை நாம் யாவரும் அறிவோம்.

நம் இந்திய பிரதமர்.திரு.மோடி அவர்கள் ஐக்கியநாட்டு சபையில் பேசியபோது யோகாவைப்பற்றியும் அதன் பலன்களைப்பற்றியும் அறிவித்தார். உலக மக்கள் ஆரோக்கியமாக இருக்க **யோகா** பயிற்சி மிக அவசியம் என்றும் கூறினார். அந்த கூட்டத்தில் கலந்துக்கொண்ட பல்வேறு உலக நாடுகளிலிருந்து வந்த **பிரதிநிதிகள்** யாவரும் யோகாவைப்பற்றி ஏற்கனவே அறிந்திருந்தார்கள். ஆகவே அனைவரும் நம் பிரதமர் கூறியதை அங்கீகரித்தனர். ஐ.நா சபை தலைவரும் அதை அங்கீகரித்தார். உடனே அதை அறிவிப்பாகவும் அறிவித்து ஒவ்வொரும் வருடமும் **ஜீன் 22ம் தேதி** யோகா விழிப்புணர்வு தினமாக அனுஷ்டிக்கலாம் என்று அறிவித்தார்.

ஜீன் 22ம் தேதிக்கு ஒரு விசேஷம் உண்டு. வருடத்துக்கு ஒருமுறை சூரியன் சாய்வான் நிலையில் சூரிய பார்வைக்கு மிக அருகேயிருக்கும். அப்போது **சூரிய நமஸ்காரம்** செய்வது இந்து மக்களின் சம்பிரதாயம். ஆனால் இதன் உண்மையான காரணத்தை கூறாமல் அதை மறைத்து ஒவ்வொரு வருடமும் ஜீன் 22ம் தேதியை மையமாக வைத்து உலக யோகா தினமாக அனுஷ்டிக்கலாம் என்று **திரு.மோடி** அவர்கள் அறிவித்துவிட்டார்.

அதன்படி கடந்த **2015 ஜீன் 22ம் தேதி** பாகிஸ்தனை தவிர உலகம் அனைத்திலும் உள்ள நாடுகளில் ஒரே நாளில் ஒரே சமயத்தில் **யோகா** பயிற்சி நடத்தப்பட்டதை டிவியில் காட்டினார்கள். இந்தியாவிலும் ஜனாதிபதி இல்லம் அருகே ராஜபாதையில் லட்சக்கணக்கான மக்கள் அமர்ந்து யோகா பயிற்சி நடத்தினார்கள். அது உலக சாதனையாக **கின்னஸ்** புத்தகத்திலும் இடம் பெற்றது. கின்னஸ் சாதனை பதிப்பாளர்கள் இந்தியா வந்தார்கள். அமெரிக்காவில் பெரும் கூட்டத்தின் மத்தியில் இந்திய பிரதமர் திரு.மோடி அவர்களுக்கு இரண்டுவித **கின்னஸ் சாதனையாளர்** என்ற பத்திரம் அளிக்கப்பட்டது. ஒன்று ஒரே நாளில் ஒரே நேரத்தில் அனைத்து உலக நாடுகளிலும் யோகா பயிற்சியில் ஆயிரக்கணக்கில் மக்கள் கலந்துக்கொண்டது. இரண்டாவது இந்தியாவில் அனைத்து மாநிலத்திலும் ஆளுங்கட்சி- எதிர்கட்சி என்ற வித்தியாசம் காணாமல் அனைத்து மக்களை ஒரே இடத்தில் ஐக்கியமாக பங்குபெற வைத்த சாதனையாளர் என்பதற்காகவும் சாதனையாளர் பத்திரம் திரு.மோடி அவர்களுக்கு வழங்கப்பட்டது.

## யோகா என்றால் என்ன?

**யோகா பயிற்சி** உலகிலேயே முதன்முதல் **இந்தியாவில்தான்** ஆரம்பிக்கப்பட்டது. யோகா பயிற்சி **சித்தர்களால்** கடைபிடிக்கப்பட்டு அறிமுகப்படுத்தப்பட்டதாகும். **புத்தரும்** தன் வாழ்க்கையில் அதை கடைபிடித்தார். புத்தரின் சிலை எந்த நாட்டில் கண்டாலும் யோகாவின் தவநிலை முத்திரையோடுள்ள உருவத்தைக் காணலாம்.

## யோகாவைப்பற்றிய கிறிஸ்தவர்களின் பயம்:

யோகா விழிப்புணர்வு பயிற்சி நடந்த ஜீன் 22ம் தேதி அன்று இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலிருந்து குறிப்பாக தமிழ்நாடு-கேரளா மாநிலத்திலிருந்து ஏராளமானவர்கள் தொலைபேசி வழியாகவும்,கடிதம் மூலமாகவும் என்னோடு தொடர்புக்கொண்டு யோகாயை பயிற்சி கிறிஸ்தவர்கள் செய்யலாமா? என்பதைக்குறித்து கேள்விகேட்ட வண்ணம் இருந்தார்கள்.

கிறிஸ்தவர்களின் பயத்தின் காரணம் யோகா பயிற்சி செய்யும்போது அதில் குறிபிட்ட ஒரு பயிற்சியில் எண்ணங்களை ஒருநிலைப்படுத்தி கண்களின் இரண்டு புருவத்தின் மத்திய பாகத்தை

ஒரு சக்கரம் என்று கூறுவார்கள். அதாவது சரீரத்தின் மையப்புள்ளி என்று அழைக்கப்படும் இடம் அந்த இடத்தில் எண்ணங்களை ஒரு நிலைப்படுத்தி கண்களை மூடிக்கொண்டு நம் சிந்தையை ஒரு நிலைப்படுத்துவது அதற்கு அவரவர் இஷ்ட தெய்வங்களை மனதில் நினைத்து அந்த பயிற்சியை செய்யவேண்டும். அந்த இடத்தில் தான் கிறிஸ்தவர்களுக்கு பயம் உண்டானது. மற்ற மத தெய்வங்கள் என்பவைகளின் பெயர்களை நாம் யோகா பயிற்சியில் நினைக்கவேண்டுமா? இதுதான் கேள்வி?. அப்படி யாரையும் நினைக்கவேண்டிய அவசியம்இல்லை. உங்களுக்கு பிரியமானால் இயேசுகிறிஸ்துவை நினைக்கலாமே. யோகா மூலம்தான் கிறிஸ்தவ விசுவாசிகள் எண்ணங்களை ஒரு நிலைபடுத்த வேண்டும் என்ற அவசியம் இல்லையே!. உண்மையில் ஒரு கிறிஸ்தவன் ஜெபத்தில் எண்ணங்கள் சிதறாமல் கர்த்தரோடு உறவாடினால் அது யோகாவைவிட பன்மடங்கு ஆசீர்வாதத்தை பெற்றுக்கொடுக்குமே!. **யோகா** என்பது ஜெபம் அல்ல- வெறும் உடற்பயிற்சி அவ்வளவே!. டிரில்மாஸ்டர் உடற்பயிற்சி கற்றுக்கொடுப்பதுபோல் யோகாவும் ஒன்றாகும்.

கடந்த 22ம் தேதி டெல்லியில் நடந்த யோகா பயிற்சி அட்டவணையில் **சூரிய நமஸ்காரம்** என்ற ஒரு பகுதி எழுதியிருந்தது. இந்திய நாட்டில் உள்ள முஸ்லீம், கிறிஸ்தவர்கள் யாவரும் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து **டிவிட்டர்** மூலம் பிரதமருக்கு எதிர்ப்பை அறிவித்தனர். **சூரியன்** என்பது நம் தேவனால் படைக்கப்பட்டது. அது **சிருஷ்டி**. சூரியனை **சிருஷ்டித்தவரை** வணங்காமல் சிருஷ்டியை நம் கர்த்தரால் படைக்கப்பட்ட அழிந்துபோகும் கிரங்களில் ஒன்றான **சூரியனை** ஏன் நமஸ்கரிக்க வேண்டும். உடனே பிரதமர் தாமதம் செய்யாமல் யோகா நிகழ்ச்சியிலிருந்து **சூரிய நமஸ்காரம்** என்பதை நீக்க கட்டளையிட்டார். 22ம் தேதி அன்று யாரும் சூரியநமஸ்காரம் செய்யவில்லை.

# யோகாவால் ஆபத்து:

யோகா பயிற்சியை புத்தகத்தில் உள்ள படங்களைப் பார்த்து யாரும் அந்த பயிற்சியை செய்ய முயலக்கூடாது. அது பெருத்த ஆபத்தை உண்டாக்கும். முதுகு தண்டு தேய்மானம் உள்ளவர்கள் முதுகுதண்டில் வியாதி உள்ளவர்கள் யோகா செய்யலாம். பிழையில்லை. ஆனால் பயிற்சியாளர் முன்னிலையில்தான் அந்த பயிற்சியை கண்டிப்பாக செய்ய முயலவேண்டும்.

முதுகுதண்டு பயிற்சியில் தலையை மட்டும் வலது பக்கமும், இடது பக்கமும் மெதுவாக திருப்பி பயிற்சிக்கவேண்டும். ஆனால் பயிற்சியாளர் இல்லாமல்போனால் தலையுடன் தோள்பட்டையையும் சேர்ந்து திருப்பினால் முதுகுதண்டு மிகவும் அதிகமாக பாதிக்கப்பட்டு நீங்கள் நிற்கமுடியாத படியாகிவிடும். ஜாக்கிறதை!.

## உடல் பயிற்சி:

இவ்வளவு பிரச்சனைகள் யோகாவால் காணப்படும்போது யோகா வழியாகத்தான் உடல் பயிற்சி செய்யவேண்டுமா? தேவையில்லையே! உடற்பயிற்சி செய்யும் முறைக்கு ஒரு புத்தகம் உண்டு. யோகாவைதவிர புத்தகத்தில் உள்ள உடற்பயிற்சியை ஆபத்திலில்லாமல் நமக்கு நாமே செய்யாலமே? நம் பள்ளிக்கூடத்தில் டிரில்மாஸ்டர் சொல்லி கொடுக்கும் பயிற்சி சிறந்ததாகும். அதை வீட்டில் இருந்தபடியே செய்யலாம்.

## உலக நாடுகள் ஏன் யோகாவை விரும்புகின்றன?

உலகமக்கள் யாவரும் இயந்திரம் போன்ற வாழ்க்கையை அனுபவித்துக்கொண்டு வருகின்றனர். ஆனால் உடற்பயிற்சியின் அவசியத்தை குறித்த விழிப்புணர்வு ஐரோப்பியா, அமெரிக்க நாடுகளில் உள்ளவர்கள் மிகவும் நன்றாக அறிவார்கள். அதற்காக காலையில் அல்லது மாலையில் பலர் உடற்பயிற்சிக்காக ஒடுவதை(ஜாகிங்)செய்வதை பார்க்கலாம். அல்லது கை வீசி வேகமாக நடப்பதையும் பார்க்கலாம். பெரும்பாலானவர்களுக்கு சர்க்கரைவியாதி -இரத்த கொதிப்பு உண்டு. ஆகவே தினசரி நடைபயிற்சி ஒடும் பயிற்சி இல்லாமல்போனால் அது அந்த வியாதி உள்ளவர்களுக்கு ஆபத்தை உண்டாக்கும். அதற்காக விசேஷ ஷீ காலனி அணியவேண்டும். விசேஷ உடை அணியவேண்டும். இப்படி பல தொல்லைகள் இருப்பதால் யோகா பயிற்சி என்பதை வீட்டிலேயே செய்யும்

பயிற்சியானதால் உலக மக்கள் யோகாவை நாடுகிறார்கள். இன்று யோகா பயிற்சியாளர்களுக்கு உலக நாடுகளில் நல்ல கிராக்கி உண்டு. நல்ல சம்பளமும் உண்டு.

நம் எல்லாருக்கும் உடற்பயிற்சி மிக முக்கியம். சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையமுடியும். நம் உடல் நன்றாக இருந்தால்தான் ஊழியமும் செய்யமுடியும். அதனால்தான் FMPB முன்னாள் பொது செயலர் சகோ.பேட்ரிக் ஜாஷ்வா அவர்கள் எல்லா மிஷனரிகளுக்கும் உடற்பயிற்சியின் அவசியத்தை கூறினார்.

டாக்டராகிய எனக்கே ஒரு உடற்பயிற்சி புத்தகத்தை சகோ.பேட்ரிக் ஜாஷ்வா அவர்கள் கொடுத்து வீட்டுஅறைக்குள்ளேயே உடற்பயிற்சி செய்யுங்கள் என்று எனக்கு ஆலோசனை கூறினார்.

அநேகர் கார் அல்லது மோட்டர் பைக் வாங்கிய நாள் முதல் நடப்பது நின்றுவிட்டது. உடல் அசைவு நின்றுவிட்டது. அடுத்த தெருவுக்கு போகவேண்டுமானாலும் மோட்டர் பைக் எடுத்து செல்கிறார்கள். ஆகவே வயிறு பெரிதாகிறது. கொழுப்பு சரீரத்தில் சேருகிறது. வயிற்றில் **பேங்கிரியாஸ்** என்ற பகுதியின் செயல்பாடு குறைந்துபோகிறது. ஆகவே வாகனம் வைத்திருப்பவர்கள் பெரும்பாலானவர்கள் தினசரி **நடைபயிற்சி** ஓடும் பயிற்சி செய்யவேண்டும் என்று டாக்டர்கள் அறிவுறுத்துகிறார்கள்.

நானும் என் வீட்டில் என் அறையில் அல்லது குளிக்கும் அறையில் சிறிய அளவு உடற்பயிற்சியை தினசரி செய்யமுயலுகிறேன்.

ஆகவே நான் என்ன கூறவிரும்புகிறேன் என்றால், கிறிஸ்தவர்கள் யோகாவைப்பற்றி பயம் கொள்ளவேண்டாம். அதைவிட உடற்பயிற்சி செய்யலாம் அது மிகவும் நல்லது.

ஆரோக்கியம் உள்ளவரானாலும், வியாதி உள்ளவரானாலும் ஒவ்வொரு மனிதனுக்கும் **உடற்பயிற்சி** இன்றியமையாததாகும். பெண்ணோ-ஆணோ எல்லாரும் உடற்பயிற்சி செய்வது உடலை ஆரோக்கியத்தோடு காத்துக்கொண்டு கர்த்தருக்கென்று தங்கள் சரீரத்தைப் பயன்படுத்துங்கள்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

# என் வெளிநாட்டு ஊழியங்கள்:

## USA SPRITUAL MEETINGS:

2015 **OCTOBER** 6 TO 9 - **NEW YORK,IOWA, NEW JERSY**

10,11 - **CHICAGO**

## CANADA

2015 **OCTOBER** 12 TO 18 - **TORANTO** - CANADA

## ABU DHABI:

2015 **OCT** 19 TO 23 -CSI **ABU DHABI** CSI MALAYALA CONGREGATION

## ENGLAND

2015 **OCTOBER** 24 TO 25 - **MIDILSEX,**ENGLAND -Bishop.REGINOLD

26, 27 - **IRELAND -** Mr.JOHN WESLY

28 - **INDIA** RETURN

## DUBAI

2015 **NOVEMBER** 23 TO 29 - **DUBAI** TAMIL CSI CONGREGATION

# கேள்வி - பதில்

# ஜாமக்காரனின் பதில்கள்



## பரதீசு-பாதாளம்

**கேள்வி:** கள்ள ஊழியர்களைப்பற்றி நீங்கள் எச்சரித்தது மிகவும் பிரயோஜனமாக இருந்தது. மோகன் சி.லாசரஸ் வாலிபர் உலகம் என்ற பத்திரிக்கையில் அவரும் கள்ள ஊழியர்களை எச்சரித்துள்ளாரே?.

**பதில்:** *__பாம்பின் கால் பாம்பு அறியும்__ என்பது ஒரு பழமொழி. மேலும் திருடனை பிடிக்க ஒடிய ஊர் ஜனங்களோடு உண்மை திருடனும் இணைந்து திருடனைபிடி திருடனைபிடி என்று கத்திக்கொண்டு ஓடினால் திருடன் பிடிபடுவனா? திருடனை ஜனங்கள் கண்டுபிடிக்க முடியாது. வாசகர்கள் விளங்கிக்கொள்ள உதாரணத்துக்கு இதை கூறினேன்.*

## BLESS - CMC*(வேலூர்)*

**கேள்வி:** *உபவாச ஜெபத்தை நடத்த வேலூர் BYM ஸ்தாபகர் __R.ஸ்டான்லியும்__, தனி ஜெப அழைப்பு சுற்றிக்கை அனுப்பியுள்ளாரே?*

**பதில்:** *CMC ஆஸ்பத்திரியில் தான் சகோ.ஸ்டான்லியும், துணைவியார் Dr.லல்லின் ஸ்டான்லியும் வேலை செய்தவர்கள். ஆகவே CMCயைக்குறித்த பாரம் சகோ.ஸ்டான்லி அவர்களுக்கு உண்டானது நியாயமானதே?*

*ஆனால் சகோ.__மோகன் சி.லாசரஸ்ஸிடன்__ இணைந்து ஜெபிப்பதுதான் என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது. மிக அதிகமான கூட்டம் சேர்க்க சகோ.மோகன் சி.லாசரஸ் அவர்களால் முடியும்.*

*ஆனால் அந்த ஜெபம் கேட்கப்படுமா என்பதை யோசித்துப்பாருங்கள். சகோ.மோகன் சி.லாசரஸ் அவர்களுக்கு நான் எதிரியல்ல. ஆனால் ஒவ்வொரு கூட்டத்திலும் __ஜெபத்தில் பொய்யாய் பெயர் அழைக்கும் ஊழியத்தை__ செய்யும் ஒருவரின் ஜெபத்தை கர்த்தர் கேட்பாரா?*

*மோகன் சி.லாசரஸ் அவர்களால் ஜனங்களை ஜெபத்தில் நடத்த முடியும். அவரும் ஜெபிக்க முடியும். ஜெபத்தில் அவரால் அழவும் முடியும். ஆனால் பொய் பேசுபவரின் ஜெபத்துக்கு தேவன் தன் முகத்தை திருப்பிக்கொள்வார்.*

*CMCயாவது துடிப்போடு இயங்கிக்கொண்டிருக்கிறது. ஆனால் __ஆம்பூர் பெதஸ்தா__ ஆஸ்பத்திரி செத்துக்கொண்டிருக்கிறதே?. ஒரு காலத்தில் ஆம்பூர் பெதஸ்தா மெடிக்கல் கல்லூரியாககூட மாறும் என்று எதிர்ப்பார்க்கப்பட்டதே. 1969ம் வருடம் ஆம்பூர் மிஷன் உயர்நிலைப்பள்ளி மைதானத்தில் நான் பிரசங்கிக்கும்போது பெதஸ்தா ஆஸ்பத்திரி AO(Administration Officer) அவர்களின் வீட்டில்தான் தங்கியிருந்தேன். அந்த நாட்களில் ஆஸ்பத்தரி நிலையை யோசித்தால் எத்தனை பெருமையாக இருந்தது. ஆனால் இன்று நர்சுகள், 6 மாதமாக சம்பளம் வாங்காமல் வேலை செய்து கொண்டிருப்பதாக கேள்விப்படுகிறேன்.*

அதே சமயம் பெதஸ்தா ஆஸ்பத்திரியின் பெரிய தலைகள், நிர்வாகிகள் மட்டும் மாதாமாதம் சம்பளம் பெறுவது எப்படி? **நர்சுமார்களுக்கும் குடும்பம்** உண்டே,பிள்ளைகள் உண்டே, அவர்கள் எப்படி குடும்பம் நடத்துவார்கள். எத்தனை நாட்களுக்கு கடன்வாங்கி பிள்ளைகளுக்கு சாப்பாடு போடுவார்கள். பண ஊழல் கதை கேட்டால் மிக விரைவில் பெதஸ்தா இழுத்து மூடப்படும் .அரசாங்கம் முறையான விசாரணை நடத்த வேண்டும். இப்போதைய கணக்கு காட்டாத நிலையை கண்டு பெரும் பணத்தொகை உதவி செய்ய முன்வந்த வெளிநாட்டு ஸ்தாபனம் கணக்கு சரியாக காட்டாதவரை பணம் அனுப்பமாட்டோம் என்று கூறியதாக செய்தி.

' **டேனிஷ்பேட்டை பெத்தேல்** ஆஸ்பத்திரியும் மோசமான நிலையிலிருந்து மாறவில்லை. **Dr.சாம் கமலேசன்** அவர்களும் சுகம் பெற்று நல்ல ஆரோக்கியத்தோடு பலமுறை டேனிஷ்பேட்டை வந்துபோகிறார். ஆனால் மாற்றம் இல்லையே? ஜெபத்தில் அழவேண்டி கிறிஸ்தவ மிஷன் ஆஸ்பத்திரி நிறைய உண்டு. அவைகளுக்காக ஜெபிக்கும் மனிதர்களை கர்த்தர் தேடுகிறார். தேடிக் கொண்டுயிருக்கிறார். உண்மையாய் ஜெபிக்கவேண்டியவர்கள் திரள் கூட்டத்தில் மயங்கியிருக்கிறார்கள். முதலில் ஜெபிக்க ஏற்பாடு செய்தவர்களுக்காக ஜெபிப்போம்.

❖❖❖❖❖❖❖❖❖❖

# ஆட்கள் தேவை

**கேள்வி: FMPB அறைகூவலில் ஜீன் மாத பத்திரிக்கையில் மிஷனரி ஊழியம் செய்ய ஆட்கள் தேவை என்று விளம்பரம் செய்துள்ளார்களே!, ஜெபக்குழு தலைவனாக இருந்த எனக்கு இப்படிப்பட்ட விளம்பரம் மனவேதனையை கொடுக்கிறது.**

**பதில்:** நானும் பலரிடத்தில் இதைக்குறித்து கேட்டேன். ஆசிரியர்கள் தேவை, டெக்னிஷியன் தேவை, வேன் டிரைவர் தேவை என்பது போன்று மிஷனிகள் தேவை விளம்பரம் அறிவிக்கும் நிலை FMPBக்கு ஏன் ஏற்பட்டது?

மற்ற எந்த வேலைக்கும் விளம்பரம் மூலம் ஆளைத் தேர்ந்தெடுக்கலாம். சபை பாஸ்டர்கள்கூட விளம்பரம் மூலம் தற்காலிகமாக தோந்தெடுக்கலாம்.

ஆனால் FMPB போன்ற ஜெபிக்கும் மிஷனரி ஸ்தாபனத்துக்கு மிஷனரியாக வருபவர்கள் முதலில் FMPBயைக்குறித்து அறிந்தவராக இருக்கவேண்டும். அப்படிப்பட்டவர்கள் FMPB ஜெபகுழுவில் இணைந்து ஜெபித்தவர்களாக இருக்கவேண்டும்.

அந்தந்த ஜெபக்குழு தலைவர்கள் அவர்களின் உண்மையான **இரட்சிப்பைக்குறித்தும், மிஷனரி பாரத்தைக்குறித்தும்** அறிந்திருக்க வேண்டும். இப்படிப்பட்ட ஜெபக்குழுவிலிருந்து மிஷனரிகளாக வந்தவர்களால்தான் FMPB இந்த அளவு வளர்ந்து உயர்ந்தது. அப்படிப்பட்டவர்கள் தான் மிஷனரி ஸ்தாபனத்துக்கும்,மிஷனரி பணியிலும் உண்மையானவர்களாக ஊழியம் செய்யமுடியும்.

சகோ.**பி.சாம்,** சகோ.**எமில் ஜெபசிங்,**சகோ.**ஸ்டான்லிபிரின்ஸ்** இவர்களெல்லாம் அந்த காலத்தில் சந்தியா கூட்டத்தில் பேசி முடித்தபின் மக்கள் அழுதுக்கொண்டு மிஷனரி பணிக்கு ஒப்புக்கொடுத்து வந்தார்களே, அந்த நாட்களை நினைக்கிறேன். இப்போதுள்ள FMPBயின் சூழ்நிலை மனதிற்கு வேதனையை கொடுக்கிறது.

2016க்குள் இத்தனை இலட்சம் ஆத்துமாக்கள் தேவை என்ற டார்கெட்டை முடிக்க ஆசைப்பட்டால் மிலிட்ரிக்கு ஆட்களை சேர்ப்பதைப்போல சேரும் ஆட்கள்தான் மிஷனரிகளாக கிடைப்பார்கள். **ஆட்கள் கிடைக்கும் - தரம் இருக்காது (குவான்டிட்டி கிடைக்கும் - குவாலிட்டி இருக்காது.** ஜெபிப்போம். ❖❖❖❖❖❖❖❖❖❖❖

# கேள்வியும் நானே! - பதிலும் நானே!

## (அனுபவம் பேசுகிறது) R.ஸ்டான்லி, (BYM)

**கேள்வி: யாருடைய குறையாவது எனக்குத் தெரிந்தால், அதற்காக ஜெபிப்பதற்குப் பதிலாக அதைப் பகடி பண்ணி,பிரகடனப்படுத்துகிறேனா?**

**பதில்:** *பேதுருவின் விருப்பத்தைவிட, அவரது வலுவின்மைதான் பெரிதாயிருந்து, இயேசு பேதுருவை முன்னெச்சரித்தது மட்டுமல்ல, அவருக்காக மனதுருகி,வேண்டுதலும் செய்தார். அவரது உடனாளிகளுக்கு அவர் பின்னர் எவ்விவதம் பணி செய்வார் என்பதையும் முன்னறிவித்து பேதுருவை இயேசு உற்சாகப்படுத்தினார்.(லூாக் 22:31-34).* ❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

**கேள்வி: என்னை யாராவது காட்டிக்கொடுத்துவிட்டால், அந்த நபரை நான் வெறுக்கிறேனா? மனிதன் மனிதன்தான்! என்பதையும், இறைவன் மட்டுமே 100 சதவீதம் நம்பத் தகுந்தவர் என்பதையும் மறந்துவிடுகிறேனா?**

**பதில்:** *யூதாஸ் ஒரு திருடனாயிருந்தும், இயேசு நம்பிக்கையோடு அவனிடம் பணப்பையைக் கொடுத்து வைத்திருந்தார். தனது மனமாற்றத்திற்காக இயேசு இவ்விதமாகத் தனக்குக் கொடுத்த வாய்ப்பை அவன் பயன்படுத்திக்கொள்ளவில்லை. ஆனாலும்,கள்ள முத்தம் கொடுத்து, இயேசுவை யூதாஸ் காட்டிக்கொடுத்தபோது, அவர் அவனை சிநேகிதனே ... என்றுதான் அழைத்தார்.(யோவான் 12:4-6,மத் 26:50).* ❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

**கேள்வி: எனது விரோதிகளுக்கு எதிராக உலகத்தைச் சார்ந்த போராயுதங்களைப் பயன்படுத்துகிறேனா? கர்த்தர் அனுமதித்ததற்கு மிஞ்சி, ஒரு மனிதனும் எனக்கு விரோதமாக ஒன்றும் செய்யமுடியாது என்ற உணர்வு எனக்கு இல்லையா?**

**பதில்:** ***மல்குஸ்*** *என்ற வேலைக்காரனின் காதைத் தொட்டு இயேசு சுகப்படுத்தியது. பேதுருவின் முரட்டுச் செயலைக் கண்டனம் செய்ததாகும். வாள் வைத்திருந்தாலும், அதைப் பயன்படுத்த மறுப்பதே உண்மையான* **ஆன்மீகம்** *(யோ 18:10,11, மத் 25:51.52). பிலாத்துவைப் பார்த்து இயேசு,....* ***பரத்திலிருந்து உமக்கு கொடுக்கப்படாதிருந்தால், என்மேல் உமக்கு ஒரு அதிகாரமுமிராது...*** *என்றார்.(யோவ 19:10,11).*

**கேள்வி: என்னைப் பாதிக்கும் ஒருவருக்கு நான் புரியும் எதிர்ச்செயல்,அவரை உணர்த்துவிக்கிறதா? அல்லது தீர்ப்பளித்து அவரை ஒதுக்குகிறதா?**

**பதில்:** *பேதுருவைக்குறித்து இயேசு முன்னறிவித்த யாவும் நிகழ்ந்தன. இயேசுவைப் பேதுரு மறுதலித்ததுமட்டுமல்ல,சபிக்கவும் செய்தார்.* ***இயேசுவை அது எவ்வளவாகப் புண்படுத்தி இருக்கும்*** *என்று கொஞ்சம் சிந்தித்துப்பாருங்கள். ஆனால்,இயேசு பேதுருவைத் திரும்பிப் பார்த்த பார்வையிலுள்ள* ***கனிவும்,பரிவுணர்வும்*** *அவரை நொறுக்கி,மனம்நொந்துஅழச்செய்தது.(லூாக் 22:61,62).*

**கேள்வி: நான் அநியாயமாய் குற்றஞ்சாட்டப்படும்போது, வாதாடி,தற்காப்புச் செய்கிறேனா? அல்லது எனக்காகப் போராடும்படி கர்த்தரிடம் திரும்புகிறேனா?.**

**பதில்:** *தலைமைக் குரு இயேசுவினிடத்தில் இவர்கள் உனக்கு எதிராகக்கூறும் குற்றச்சாட்டுகளுக்கு மறுமொழி கூறமாட்டாயா? என்று கேட்டதற்கு,இயேசு ஒன்றும் பேசாமல் அமைதியாயிருந்தார்.(மத் 26:62,63). அதே கேள்வியை பிலாத்து இயேசுவினிடத்தில் கேட்டபோதும்,இயேசு ஒரு வார்த்தைக்கூட பதில் சொல்லவில்லை(மத் 27:13,14). மாறாக, இறையரைசக்குறித்தும்,சத்தியத்தைக்குறித்தும் அவர் பிலாத்துவின் முன் அறிக்கையிட்டார். (யோ 18:36,37,1 தீமோ 6:13).* ❖❖❖❖❖❖❖

# மோசா வல்சலம் சாஸ்திரியார் அவார்டு:



**கேரளத்தில்** எல்லா சபையினராலும் அறியப்பட்ட பிரபல கவிஞரும்,கிறிஸ்தவ பாடல்களை இயற்றியவருமான **மோசா வல்சலம் சாஸ்திரியார்** அவர்களை கேரள மாநிலத்தில் கேள்விப்படாதவர்கள் மிகவும் குறைவு.

நம் தமிழ்நாட்டு CSI & லுத்தரன் பாட்டு புத்தகங்களில் உள்ள பெரும்பாலான பாடல்களை எதுகை மோனையோடு-பாடல் கருத்து மாறாதபடி அப்படியே மலையாள பாஷையில் மொழிபெயர்த்து உதவியவர் ஆகும். இப்போது கேரளா **CSI,மார்தோமா,லூத்தரன்** சபைகளில் பாடும் கீர்த்தனை பாடல்கள் பெரும்பாலும் தமிழ் கீர்த்தனைகளிலிருந்து எடுத்தாளப்பட்டவைகளாகும்.

**எல்லாம் ஏசுவே எனக்கெல்லாம் ஏசுவே,**

**தாசரே இத்தரணியை எல்லாம் இயேசுவுக்கு சொந்தமாக்குவோம்** என்பன போன்ற பிரபல பாடல்களை மலையாள சபைகளில் எல்லா வாரமும் ஆராதனையில் பாடுகிறார்கள். **திரு.மோசா வல்சலம் சாஸ்தியார்** அவர்கள் இயற்றிய பாடல்களும் மிகவும் பிரசித்தம். திரு.மோசா வல்சலம் சாஸ்திரியாரின் மரணத்துக்குப்பிறகு அவர் பெயரில் **கின்னஸ் ரெக்கார்ட் ஸ்தாபனம்போல** அவர் பாடல் ஊழியத்தை கவுரவிக்கும் வண்ணம் மோசா வல்சலம் சாஸ்தியார் அவர்கள் பெயரில் ஒரு டிரஸ்ட் உருவாக்கி, அவர் பாடல்மூலம் பயன்பெற்ற அனைத்து கேரளமாநில சபை மக்கள் எல்லாரும் பணம் சேகரித்து அந்த டிரஸ்ட்டின் கணக்கில் பேங்கிலிட்டு பண சேமிப்பு தொடங்கினர். ஒரு பெரும் தொகை சேர்ந்தது.




அதற்கு கிடைத்த வட்டியிலிருந்து பணம் எடுத்து 3 வருடத்துக்கு ஒருமுறை கேரளத்தில் வாழும் **கிறிஸ்தவ ஆவிக்குரிய பாடல்களை** இயற்றுபவர் கள்,பாடல்பாடுபவர்கள் இவர்களை அந்த கமிட்டி தெரிந்தெடுத்து திரு.வல்சலம் சாஸ்திரியார் பெயரில் தெரிந்தெடுக்கப் பட்ட கிறிஸ்தவ பாடல் ஆசிரியர்களுக்கு,பாடகர்களுக்கு **அவார்டு,மெடல்,பொற்கிழி** ஆகியவைகளை 3 வருடத்துக்கு ஒருமுறை அவர்களுக்கு பெரிய மண்டபத்தில் வைத்து நாடறிய அவார்டு,பொற்கிழி கொடுத்து கவுரவிப்பது வழக்கம்.

கடந்த வருடம் 2014ம் ஆண்டு **கண்ணனூர்** CSI சபையை சேர்ந்தவரும், பைபிள் சொசைட்டி மலபார் பொருப்பாளருமான பிரபல பாடகர். **சகோ.S.K.சிரில்** என்பவருக்கு வல்சலம் சாஸ்திரியார் நினைவு சின்னமும்,பொற்கிழியும், திருவனந்தபுரம் CSI பிஷப் Rt.Rev.A.Dharmaraj Rasalam அவர்களால் வழங்கப்பட்டது. பரிசு பெற்ற சகோ.சிரில் அவர்களின் பல ஹிட் பாடல்களில் ஒன்றுதான் **ஏசுமதி எனக்கேசு மதி**

**நியல்லால் யாருண்டு தெய்வமே**

**நீ எத்தா நல்லவன்** இது மாதிரி இவர் இயற்றிய பல பாடல்கள் கேரளா கிறிஸ்தவ மக்களை கவர்ந்தது. தமிழிலும் இவர் பாடல்கள் மொழி மாற்றம் செய்ததால் தமிழ்நாட்டிலும் இவர் பாடல் பிரசித்தமானது.



சகோ.**S.K.சிரில்** அவர்களுக்கு 8 பேர் அடங்கிய Papinassery Gospel Team என்ற ஒரு பாடல் குழு உண்டு. 1969ம் வருடத்திலிருந்து நான் கேரளா மாநிலத்தில் பிரசங்கிக்கும் மைதானங்களில் நடக்கும் பல பெரிய கன்வென்ஷன்களில் இவர் தன் குழுவினரோடு என் பிரசங்கத்துக்குமுன் பாடல் நேரத்தை நடத்துவார். இவர் குழுவில் **Bபேஸ்**,டென்னர்,சுப்ராணா ஆகிய பல்வேறு குரல்வளம் உள்ளவர்கள் சேர்ந்து பாடல்பாட இவர் தன் இனிய Bபேஸ் குரலில் மிக அழகாக பாடுவார். மக்கள் மெய்மறந்து பாடலை ரசிப்பார்கள்.

ஒருமுறை **(டாக்டர்.புஷ்பராஜ்)** என் கூட்டம் கேரளத்தில் கள்ளிக்கோட்டை டவுன் மைதானத்தில் நான்கு நாட்கள் தொடர்ந்து நடந்தது. அந்த கூட்டங்களில் **சகோ.SK.சிரில்** அவர்கள் தன் குழுவோடு பாடல்களை பாடிக்கொண்டிருந்தார். இரண்டாம் நாள் நடந்த என் கூட்டத்தில் கர்த்தர் அவரை மனம் திரும்ப வைத்தார். புது தீர்மானம் எடுத்தவர்கள் கூட்டத்தில் இவரும் வரிசையில் நின்று என்னிடம் ஜெபிக்க நிற்பதை கண்டேன்.

சகோ.**SK.சிரில்** அவர்கள் வல்சலம் சாஸ்திரியார் நினைவு பரிசு வாங்கிய அந்த குறிப்பிட்ட நாளில் நன்றி தனக்க கிடைத்த கவுரவ பரிசுக்கு கூறும்போது தான் **மனந்திரும்பிய** சம்பவத்தையும் கூறினார். பத்திரிக்கைகளும்,டிவியும் அதை வெளியிட்டன. இப்போது அவரே தன் சாட்சியை பத்திரிக்கையாளர் கூட்டத்தில் நிருபர்களுக்கு எழுதி அறிவித்ததை இங்கு வெளியிடுகிறேன்.

## சகோ.S.K.சிரில் அவர்களின் சாட்சி:

என் பெயர் **S.K.சிரில்** நான் கேரளாவில் கண்ணூர் CSI சபையை அங்கத்தினன். நான் சிறு வயதிலிருந்தே பாட்டில் அதிக நாட்டம் உள்ளவனாக,சினிமாவில் பாட்டு பாடவும் அலைந்தேன். அதே சமயம் CSI ஆலய பாடல் குழுவிலும் பாடல் பாடி குழுவின்(கொயர்) தலைவனாக பாடல் நடத்திக்கொண்டிருந்தேன்.

ஆனால் அந்த நாட்களில் பெயர் கிறிஸ்தவனாக வாழ்ந்தேன். ஒரு நாளைக்கு 10 பேக்கட் 10x10 =100 சிகரெட்டுகளை ரசித்து குடிப்பேன். தமிழ்நாட்டில் சினிமா கவிஞரும்,சினிமா பாடலாசிரியருமான **கவிஞர்.கண்ணதாசன்** கூறுவதைப்போல் **மதுபானம்** குடித்தால்தான் பாடலும் கவியும் தனக்கு சரளமாக வரும் என்பார். அதுபோல நானும் சிகரெட் வாயிலிருந்தால்தான் நிறைய கிறிஸ்தவ பாடல் இயற்றி ராகமும் அமைப்பேன். புகைப்பிடிப்பது பாவம் என்பது எனக்கு தெரியாது? **புகைப்பிடித்தால் கர்த்தர் கொடுத்த சரீரத்தை** நானே

அழிப்பதற்கு ஒப்பாகும் என்பதை நான் அறியாமல் இருந்தேன். ஆனால் சிகரெட் பிடித்துக் கொண்டேயும், பாவம் செய்துகொண்டிருந்தபோதும் நான் எழுதிய பல பாடல்கள் கிறிஸ்தவ சபைகளில் ஹிட் பாடல்களாக(Hit Song) பிரபலமானது. அதுமட்டுமல்ல, இரட்சிக்கப்படாத வனாய் நான் இயற்றிய என் **பாடல் வரிகள்** பலருடைய வாழ்க்கையை ஆவிக்குரிய வாழ்க்கையாக மாற்றியதையும் அறிவேன். பாவம் செய்துகொண்டே சிலர் ஊழியமும் செய்கிறார்களே!, அதுபோல் அமைந்தது என் வாழ்க்கை!.

ஒருமுறை டாக்டர்.புஷ்பராஜ் அவர்களின் கூட்டத்தில் பாடல் நடத்த கூட்ட ஏற்பாடு செய்த ஆயர்களால் நான் அழைக்கப்பட்டு என் குழுவினருடன் ஒவ்வொரு நாளும், டாக்டருடைய பிரசங்கத்துக்குமுன் நானும் பாடிக்கொண்டிருந்தேன்.

இரண்டாம் நாள் கூட்டத்தில் **டாக்டர்.புஷ்பராஜ்** அவர்களின் பிரசங்கமும்,பிரசங்கத்தில் அவர் உபயோகித்த வசனமும் என்னை தொட்டது. என் மறைவான பாவத்தை அந்த வசனம் சுட்டிக்காட்டியது. என் மாயமாலமான வாழ்க்கையை நினைத்து இரகசியமாக அழுதேன். டாக்டர்.புஷ்பராஜ் அவர்களிடம் ஜெபிக்க நீண்ட பெரிய கூட்டம் காத்திருந்தது. அதில் நானும் வரிசையில் நின்றேன். டாக்டர் அருகில் நான் வந்தவுடன் அவர் என் தலைமீது தன் கையை வைத்து ஜெபித்தார். அப்போதுதான் எனக்கு அதிர்ச்சி உண்டானது. என் பாவத்தையும் கர்த்தரை புகழும் வாயால் கர்த்தர் வசிக்கும் சரீரத்தை கெடுக்கும் உங்கள் பாவ வாழ்க்கையிலிருந்து நீங்கள் விடுபட தீர்மானம் எடுத்தால் மட்டுமே கர்த்தர் உங்கள் பாடல் ஊழியம் மூலமாக மகிமைப்படுவார் என்று ஜெபத்தில் கூறினார். எனக்கு தூக்கிவாரிபோட்டது. என் இரகசிய பாவம் இவருக்கு எப்படி தெரியும்? இவைகளை குறித்து நான் யோசித்துக் கொண்டேயிருந்தபோது, பெண்கள் வரிசையாக டாக்டரிடம் ஜெபிக்க வந்தனர். டாக்டரிடம் ஜெபித்தவர்களெல்லாம் அழுதுகொண்டே செல்கின்றனரே, ஜெபத்தில் அப்படி அவர் என்ன சொல்லியிருப்பார்?. நான் போய் அழுத அந்த நபரையே கேட்டுப்பார்ப்போம் என்று நான் நினைப்பதற்குள், என் மனைவி டாக்டரிடம் ஜெபிக்கும் வரிசையில் வருவதை கண்டேன். அவளும், டாக்டரிடம் முழுங்கால் படியிட்டாள். அவர் தலையில் கைவைத்து கொஞ்ச நேரம் என்னவோ அவளிடம் கூறுவதை கண்டேன். ஜெபித்தபின் என் மனைவியை தனியாக அழைத்து டாக்டர் ஜெபத்தில் என்ன கூறினார் என்றேன். அதற்கு அவள் மகளே, இனி உன் ஜெபத்துக்கு பதில் கிடைத்துவிடும். பல வருடங்களாக உன் உள்ளத்திலிருந்த உன் பாரமும் நீங்கும் என்றார். அப்போது நான் நளினி உன் மனதில் என்ன கவலை இருந்தது, என்ன பாரம் இருந்தது என்றேன். நான் புகைப்பிடிக்கும்(சிகரெட்) பழக்கமும் இரவில் மட்டும் நான் விட்டுவிடும்படி அதுவும் தினமும் குடிக்கமாட்டேன் வாரம் 3 முறை குடிப்பேன். குறிப்பிட்ட இந்த இரண்டு பழக்கங்களையும் நான் விட்டுவிடும்படி அவள்(என் மனைவி) கர்த்தரிடம் பல வருங்களாக ஜெபித்துக் கொண்டிருந்ததையும் அதற்காக வாரம்தோறும் உபவாசம் எடுத்து ஜெபிப்பதையும் என்னிடம் கூறினாள். என் மனைவி அன்றுதான் என் மனைவியின் மனவேதனையை அறிந்தேன். நான் என் மனைவியை மிகவும் நேசிப்பேன். என் மனைவி என் பாவ பழக்கத்தை குறித்து மிகவும் மனவேதனைப்பட்டிருக்கிறாள் என்பதை அன்றுதான் உணர்ந்தேன். என்னிடம் என் குறையை சுட்டிக்காட்டமாட்டாள். உடனே இதே நாளில் கர்த்தர் டாக்டரின் பிரசங்கத்தின் மூலமாகவும், தனியாக ஜெபிக்கவந்தபோதும் என்னிடம் இந்த பாவ பழக்கம் ஆசீர்வாதத்துக்கு தடையாக இருக்கிறது என்று கூறி உணர்த்தினார் என்பதை என் மனைவியிடம் கூறினேன். அந்த நிமிடமே என் மனைவியின் பார்வையில் அவளுக்கு முன்பாக என் பாக்கெட்டில் இருந்த அத்தனை சிகரெட்டையும் **கையில் பிடித்து** கசக்கி துார எறிந்தேன். அன்று **நானும், என் மனைவியும்**

இணைந்து ஜெபித்தோம். அன்று நான் எடுத்த அந்த புது தீர்மானத்தில் இன்றுவரை நான் உறுதியாக இருக்கிறேன். இப்போது நான் பாடுவதற்க்கும்,பாவத்தில் இருந்தபோது பாடியதற்கும் மிகப்பெரிய வித்தியாசத்தை என் உள்ளத்திலும், கூட்டத்தில் ஜனங்களிடத்திலும் உண்டானதை நான் நேரில் கண்டு உணர்ந்து தேவனைத்துதிக்கிறேன்.

அதன்பிறகு நான் எழுதிய பாட்டுதான் **ஏசுமதி என்கேசு மதி** என்ற பாடல் ஆகும். இந்த பாட்டு இந்தியா,வெளிநாடுகள் எங்கும் மக்களை தொட்டன. தேவ நாமம் மகிமைப்பட்டது. இந்த குறிப்பிட்ட பாட்டுக்குதான் வல்சலம் சாஸ்திரியாரின் விருது எனக்கு கிடைத்தது.

## என் கால் துண்டாக்கப்பட்ட சம்பவம்:

மனந்திரும்பி கர்த்தருடைய பிள்ளையாக வாழ்ந்துக்கொண்டிருக்கும் போது கொடிய வியாதி என்னை தாக்கியது. **கள்ளிக்கோட்டையிலிருந்து** கர்நாடகா மாநிலத்தில் உள்ள **மங்களுர்** பெரிய ஆஸ்பத்திரிக்கு என்னை கொண்டு சென்றனர். ஆபத்தான நிலையில் நான் மங்களுர் ஆஸ்பத்திரியில் படுத்திருப்பதை கேள்விப்பட்டு ஏராளமான பெரியபெரிய வரம் பெற்ற ஊழியர்கள் எல்லாரும் நேரில் வந்து எனக்காக ஜெபித்து போனார்கள். நீங்கள் விரைவில் பூரண சுகம் பெற்று ஊழியம் செய்வதை கர்த்தர் எனக்கு காட்டினார் என்றும் தீர்க்கதரிசனம் கூறினார்கள். ஜெபித்த அத்தனை ஊழியர்களும் நான் சுகம் பெற்றுவிடுவேன் என்றே ஜெபித்தனர். அதன்படியே என் வியாதியிலும் மாற்றம் தெரிந்தது. ஆஸ்பத்திரியில் என் படுக்கை அருகே நடைபயிற்சி பெறவும் தகுதி பெற்றேன்.



**சகோ.சிரில்(செயற்கை காலோடு) அவர்கள் குடும்பத்தினருடன், நான் நடுவில் இருக்கிறேன்.**

அந்த நேரத்தில்தான் டாக்டர்.புஷ்பராஜ் அவர்கள் என்னை பார்ப்பதற்குக்கென்றே 34 மணி நேரம் ரயில் பயணம் செய்து ஆஸ்பத்திரிக்கு வந்தார். எங்களால் நம்ப முடியவில்லை. எவ்வளவு, பெரிய தேவ மனிதன். அநேகர் கன்வென்ஷன் கூட்டத்தில் கலந்துக்கொள்பவர்கள் நான் டாக்டரை மேடையில் நிற்பதை துாரத்திலிருந்துதான் கண்டிருக்கிறேன். அருகில் பார்க்க எங்களுக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை என்று கூற கேட்டிருக்கிறேன். அப்படிப்பட்டவர் என்னை காண்பதற்காக மட்டும் மங்களூர் வந்திருக்கிறார் என்பது மிகுந்த ஆச்சரியத்தையும், சந்தோஷத்தையும் கொடுத்தது. எங்கள் குடும்பத்துக்கும் பெருமையாக இருந்தது. டாக்டர் அவர்கள் என்னோடு சிறிது நேரம் பேசிவிட்டு புறப்படும் முன் ஜெபித்தார். அவர் ஜெபிக்கும்போது ஆண்டவரே, சகோ.சிரில் மறுபடியும் ஆஸ்பத்திரிக்கு போகாதபடி தயவுசெய்து அவருக்கு சுகத்தை கெடும் என்று கூறி ஜெபித்தார். அதன்பின் புறப்படும்போது ரயில்வே ஸ்டேஷனில் என் பிள்ளைகளிடம் மட்டும் இரகசியமாக கூறினராம். அப்பாவுக்கு பூரண சுகம் கிடைக்காது. நீங்கள் எல்லாரும் அப்பாவுக்கு தைரியம் கொடுக்கும் விதத்தில் பேசவேண்டும். எல்லாரும் குடும்பமாக உபவாசம் செய்து ஜெபிக்கவேண்டும் என்றாராம். அந்த விவரத்தை பிள்ளைகள் என்னிடம் கூறாமல் மறைத்தார்கள். ஆனால் என் மனைவியிடம் மட்டும் டாக்டர் கூறியதை கூறியிருக்கிறார்கள். அதன்பின் நான் பூரண சுகம் பெற்றவனாக வீடுவந்து சேர்ந்தேன்.

சில வாரங்களில் பல கன்வென்ஷன்களில் மறுபடியும் பாட தொடங்கிவிட்டேன். அப்போது திடீரென்று டாக்டர்.புஷ்பராஜிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அதில் அன்புள்ள சகோ.சிரில் நீங்கள் சுகம் பெற்று நீங்கள் மறுபடியும் பாடுவதை கேள்விப்பட்டு தேவனைத் துதிக்கிறேன். ஆனால் உங்களை ஒரு கால் இழந்த நிலையில் இரண்டு கை தாங்கிகளை பிடித்து கொண்டு மேடையில் நிற்பதைப்போல் கண்டேன். அது தரிசனமா, சொப்பனமா என்பது எனக்கு விளங்கவில்லை. உங்களுக்கு காலில் ஏதாவது பிரச்சனையா? என்று கடிதம் மூலம் எழுதிக்கேட்டார். உடனே நான் பதில் எழுதினேன். அப்படிப்பட்ட பிரச்சனை எதுவுமே எனக்கில்லை. சர்க்கரை வியாதியும் எனக்கில்லை. இரத்த கொதிப்பு மட்டும் உண்டு என்று பதில் எழுதினேன். மாதங்கள் கடந்தன. சுமார் இரண்டு வருடம் கழித்து என் கால் முட்டின் அடிபாகத்தில் வலியில்லாத கட்டி ஒன்று வளர்ந்து வந்தது. வலியில்லாததால் நான் அதற்கு வைத்தியம் செய்யவில்லை. ஆனால் அந்த கட்டி சற்று பெரிதாக மாறியவுடன் டாக்டரிடம் பரிசோதனைக்கு சென்றேன். அது சாதாரண கட்டிதான் **லைப்போமா** என்று அழைக்கப்படும் கட்டியாக தெரிகிறது என்றாலும் அதை சிறு ஆப்ரேஷன் மூலம் நீக்கி விடலாம் என்று அந்த டாக்டர்கள் எனக்கு ஆப்ரேஷனும் செய்து கட்டியை நீக்கிவிட்டனர். நீக்கப்பட்ட கட்டியின் ஒரு துண்டை பயாப்சி பரிசோதனைக்காக CMC வெல்லுருக்கு அனுப்பினர். பரிசோதனையின் பதில் எங்கள் குடும்பத்துக்கு அதிர்ச்சியை கொடுத்தது. அது **கேன்சர் கட்டி** என்று கூறி மறுபடியும் ஒரு ஆப்ரேஷன் செய்து அந்த கட்டியின் ஆணிவேர் கண்டுபிடித்து இப்போதே நீக்கவிட்டால் உடலில் எங்குவேண்டுமானாலும் கேன்சர் பரவும் என்றார்கள்.

மறுபடியும் மங்களூர் ஆஸ்பத்திரிக்கு ரயில் பயணம் செய்து ரயில்வே ஸ்டேஷனிலிருந்து நடந்தே ஆஸ்பத்திரிக்கு சென்றேன். அங்கு பல பரிசோதனைகளை நடத்தினார்கள். ஆனால் முடிவு. **கால் முட்டிக்குமேல்** 1/2 அடி உயரத்துக்குமேல் என் **காலை வெட்டி** நீக்கிவிட்டனர்.

கால் வெட்டப்படும் என்பதை என்னிடம் டாக்டர்கள் கூறியபோது நான் பதறவில்லை. காலை வெட்ட சம்மதித்தேன். ஆப்ரேஷன் தியோட்டருக்கு வெளியே என்னை ஆப்ரேஷனுக்கு நாங்கள் ஆயத்தமாக்கி கொண்டிருந்தபோது என் மகளை அருகில் அழைத்து நான் சொல்ல சொல்ல என் மனதில் வந்த பாடலை நான் அதை மகன் எழுதினான்.

அதுதான் **கர்த்தாவே நின் ஸ்நேகம் அபாரமே** என்று தொடங்கும் பாடல் ஆகும். ஆப்ரேஷன் முடித்து கால் இழந்தவனாக வீட்டுக்கு வந்தவுடன் அந்த பாடலுக்கு இராகம் இயற்றி நானே பாடினேன். அந்த பாடலும் மிகப் பெரிய(ஹிட் சாங்)வெற்றி பாடலாக பலரால் பாடப்பட்டது.

கர்த்தர் எனக்கு ஆறுதலை தந்தார். தாங்க சகிக்கவும், பெலமும் தந்தார். குறிப்பாக முறுமுறுக்காமல் துதிக்கும் மனதையும் தந்தார்.

இப்போது இடுப்பிலிருந்து மரத்தாலான கட்டை கால் செய்து அணிந்து அதன்மேல் பேண்ட் அணிந்து இப்போதும் மேடையில் நின்றுதான் பாடிக்கொண்டிருக்கிறேன் என்று கூறி திருவனந்தபுரம் சாஸ்திரியார் மெடல் வாங்கிய அந்த நிகழ்ச்சியை **என் காலை கழற்றி** பலரிடம் காட்டினேன். பலருடைய இருதயம் கர்த்தருக்குள் பெலம் பெற்றது.

ஆரம்பத்தில் என்னை காணவந்த வரம் பெற்றவர்கள், தீர்க்கதரிசனம் வரம் பெற்றவர்கள் யாவரும் நான் பூரண சுகம் பெறவேண்டும் என்று தான் கூறி சென்றார்கள்.

ஆனால் **டாக்டர்.புஷ்பராஜ்** அவர்கள் மட்டும் எதையும் மறைக்காமல் உள்ளதை அப்படியே கூறினார். **டாக்டர்.புஷ்பராஜ்** அவர்களுக்கு இப்படிப்பட்ட வரங்கள் இருப்பதாக எந்த நோட்டிசிலும் விளம்பரபடுத்தில்லை. எந்த கூட்டத்திலும் யாரும் சாட்சி சொல்ல டாக்டர் அனுமதித்தது இல்லை. ஆனால் கர்த்தர் கொடுத்த இப்படிப்பட்ட **வரம் விளம்பரம்** இல்லாமல் கேரளா முழுவதும் அவர் பிரசங்கித்த கூட்டங்களில் காணப்பட்டது. எனக்கு ஏற்பட்ட அனுபவம்போல் **டாக்டர்.புஷ்பராஜ்** அவர்கள் பிரசங்கித்த கூட்டத்தில் கலந்துக்கொண்ட பலருக்க உண்டானதை அவர்கள் கூற கேட்டேன்.

டாக்டர்.புஷ்பராஜ் அவர்களின் இத்தனை வயதிலும், எந்தவித பெருமையும் இல்லாமல், விளம்பரம் இல்லாமல், அவர் மூலமாக கர்த்தர் ஜனங்களிடையே செய்துவரும் அற்புத மன மாற்றங்களையும்,அற்புத சுகங்களையும் அறிந்து நாங்கள் குடும்பமாய் தேவனை துதிக்கிறோம். என் மலையாளப்பாடல்களை கீழ்காணும் என் விலாசத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**Bro.S.K.SYRIL,**
"SHARON",
BURNASSERI CONT,
CANNANORE, KERALA - 670 013.
Ph.0497-2712360.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

## கிறிஸ்தவர்களுக்கு சட்ட உதவி:

இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் **கிறிஸ்தவசபைகள்** தாக்கப்படுகின்றன. **சபை ஊழியர்கள், மிஷனரிகள்** தாக்கப்படுகிறார்கள். அதுமட்டுமல்ல, **மதம்மாற்றம் செய்ய முயன்றார்கள்** என்று கூறி எந்தவித ஆதாரமுமில்லாமல் பாஸ்டர்களையும், விசுவாசிகளையும் போலீஸ்லாக்கப்பிலும், சிலர் ஜெயிலிலும் அடைக்கப்படுகிறார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு உதவ ஆவிக்குரிய வக்கீல் தொழில் செய்யும் கர்த்தருடைய பிள்ளைகள் இந்தியா முழுவதும் ஒன்றாக இணைந்து **UNITED CHRISTIAN FORUM** என்ற பெயரில் **உதவி இணைப்பு** Help Line தொடங்கியுள்ளார்கள்.

உதவி தேவைப்படுவோர் இங்கு குறிப்பிடும் **1800 2084 545** என்ற எண்களில் தொடர்புக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட வக்கீல்களுக்காக தேவனை துதிப்போம். இவர்களுக்காக தினமும் ஜெபிப்போம்.




## ஜாமக்காரன் குறிப்பு:

முன் பக்கத்தில் பிரபல கிறிஸ்தவ மலையாள பாடகரான **சகோ.சிரில்** அவர்களின் சாட்சியை நீங்கள் வாசித்தீர்கள். 2015 மே மாத ஜாமக்காரனில் பக்கம் 19,20ல் மேட்டுருக்கு வந்த **பிசாசு**, ஊழியர்களின் **குடும்ப பாதுகாப்பு** என்ற தலைப்பில் கூட்டத்தில் நடந்த சம்பவத்தை எழுதினேன். அதில் நான் ஜெபித்தபோது அந்த சகோதரியிலிருந்த பிசாசு விரட்டப்பட்டு உடனடியாக அந்த சகோதரி திருமதி.சரோஜனிஜான் அவர்கள் பூரணசுகம் பெற்று மறுநாள் ஞாயிறு ஆராதனையில் கலந்துக்கொண்டதையும் வாசகர்கள் வாசித்தீர்கள்.

இந்த இரண்டு சாட்சிகளிலும் 1).பிசாசு விரட்டப்பட்டன, 2).ஜெபத்தில் சகோ.சிரில் அவர்களின் மறைவான பாவங்கள் அறிவிக்கப்பட்டன. 3). சகோ.சிரில் அவர்கள் பூரண சுகம் பெறமுடியாது என்பதை வெளிபடையாக அவர்களுக்கு அறிவித்ததைதையும், 4). ஒரு கால் இழந்து மேடையில் நின்றுக்கொண்டு பாடுவதைக்குறித்து கடிதம் எழுதி அறிவித்ததையும் இரண்டு கால்களும் சுகத்தோடு நல்ல நிலையில் இருக்கும்போதே அந்த விவரத்தை அவருக்கு கடிதம்மூலம் அறிவிக்கப்பட்டதையும் குறித்த வாசித்தீர்கள். அதை சாட்சிகள்போல பல சாட்சிகள், பல **அற்புதங்கள்** நான் பிரசங்கித்த பல கூட்டங்களில் நடந்தவைகளாகும், இப்போதும் அந்த அற்புதங்கள் நடைப்பெற்றுக்கொண்டுதான் இருக்கிறது. ஆனால் அவைகளை என் ஜாமக்காரனிலோ,நான் பிரசங்கிக்கும் கூட்டங்களிலோ நான் அறிவித்ததும் கிடையாது, சுகம் பெற்றவர்களை மேடையில் சாட்சியை அறிவிக்க அனுமதித்ததும் கிடையாது.

இவைகளைக்குறித்து வாசகர்களுக்கு பல கேள்விகள் எழலாம். ஏன் இத்தனை நல்ல சாட்சிகளை ஜனங்களுக்கு அறிவிக்ககூடாது. அது மக்களின் விசுவாசத்தை வளர்த்தவும், ஊக்குவிக்கவும் உதவுமே எனலாம். ஒரு விதத்தில் அது உண்மைதான். ஆனால் எந்த அற்புத சாட்சிகளும்,பிசாசு விரட்டப்படும் செய்திகளும் அந்த ஊழியக்காரனைத்தான் உயர்த்தும். ஆனால் கர்த்தரை உயர்த்தாது. மேலும் மறுபடியும் எந்த பிரச்சனை வந்தாலும் அந்த ஊழியக்காரனைத்தான் மக்கள் நாடி செல்ல முயலுவார்கள். அற்புதங்கள்,சுகங்கள் போன்ற சாட்சிகள் ஆண்டவருக்கு சேர வேண்டிய மகிமையாகும். ஒருநாளும் அது ஊழியக்காரர் பக்கம் திசைத்திருப்பிவிடப்படக்கூடாது. அது கர்த்தரின் மகிமையை ஊழியக்காரன் அபகரிப்பதற்கு சமமாகும். அது அந்த ஊழியக்காரருக்கு தான் ஆபத்து. ஏசா 42:8ல் கர்த்தர் கூறுகிறார். தன் மகிமையை புகழ்ச்சியை யாருக்கும் விட்டுக்கொடுக்கமாட்டேன் என்று திட்டமாக அறிவிக்கிறார்.

மேலும் மேலே வாசித்த பிசாசு நீங்கியது, வியாதி சுகமானது, பாவங்களை ஜெபத்தில் சுட்டிக்காட்டியது ஆகிய இவைகளுக்கும் எனக்கும் எந்தவித சம்பந்தமும் கிடையாது. ஊழியக்காரர்கள் வெறும் கருவிகள் மட்டுமே. ஊழியக்காரர்களுக்கு எந்த சக்தியும்,வல்லமையும் கிடையாது. இதை இன்றைக்குள்ள ஊழியர்கள் விளங்கிக்கொள்வதில்லை. ஒத்துக்கொள்வது மில்லை. **தன்னையே** கடவுளைப்போல் மக்கள்முன் காட்டுகிறார்கள். அதன் ஆபத்தை அவர்கள் உணர்ந்துகொள்வது இல்லை.

தேவன் சிருஷ்டித்த தூதர்களில் ஒருவன் தான் **லூசிபர்** என்பவன் ஆகும். இவன் **பரலோகத்திலிருந்து தள்ளிப்பட்டதின்** காரணமே. அவன் **தேவனுக்கு நான் ஒப்பாவேன்** (ஏசா 14:11-15) என்று தன்னை உயர்த்த முயற்சித்ததால்தான் அவனும்,அவன் கூட்டமும் **பரலோகத்திலிருந்து** கீழே தள்ளப்பட்டனர். அந்த ஆபத்து ஒவ்வொரு வரம் பெற்ற ஊழியருக்கும் உண்டு. ஜாக்கிறதை!.

## எனக்கு என்ன வரம் இருக்கிறது என்பதே எனக்கு தெரியாது!.

என்னை பெருத்தவரை எனக்கு **என்ன வரம்** இருக்கிறது, **எத்தனை வரம்** இருக்கிறது என்பதே எனக்கு தெரியாது. அதை தெரிந்துக்கொள்ளவும் விருப்பப்பட்டதில்லை.

**காரணம்: வரங்கள் கர்த்தரால் கொடுக்கப்படுபவை ஆகும்.**

**வரங்கள் கேட்கப்படுவதல்ல.**

வேத வசனம் அறியாத பலர் தங்களுக்கு வரங்கள் வேண்டும் என்று ஜெபிப்பவர்கள் உண்டு. அந்த ஜெபம் கேட்கப்படாது. எங்கள் கூட்டத்துக்கு வந்தால், அபிஷேகம் கிடைக்கும்,9 வரங்களும் கிடைக்கும் வாருங்கள் என்று விளம்பரம் செய்பவர்கள் கள்ள ஊழியர்களாகும்.

கர்த்தருடைய வசனத்தை வேத வசனத்தில் உள்ளபடியே போதித்தால் விசுவாசிகள் அத்தனை பேர்களும் அவரவர் சுகத்தை அவரவர்களே பெற்றுக்கொள்ளமுடியும். சங் 107:20. அவர் தமது வசனத்தை அனுப்பி அவர்களை சுகமாக்கினார்.

என் ஊழியத்தில் ஒவ்வொரு வெளி ஊரிலும், நாட்டிலும் நான் பேசும் கூட்டங்களில் பலவித அற்புதங்கள் நடைபெறுகிறது. அந்தந்த இடத்துக்கு அங்குள்ள மக்களுக்கு எந்த வரம் செயல்படவேண்டுமோ அந்த வரம் என் மூலமாக நான் ஜெபிக்கும்போது அல்லது பிரசங்கிக்கும்போதே செயல்படுகிறது. நம்மையும், நம் ஊழியத்தையும் ஆண்டவரின் சித்தத்துக்கு விட்டுக்கொடுத்தால் போதும் ஆண்டவர் நம்மையே அவரின் கருவியாக்கி அற்புதங்கள் நடைபெற செய்வார். அவ்வளவுதான். மக்கள் பிரசங்கம் கேட்கிறார்கள். பிரசங்கத்தில் நான் உபயோகிக்கும் வசனத்துக்கு மக்கள் கீழ்படிகிறார்கள். அப்போதே அற்புதம் அவர்களுக்குள் நடைபெற்றுவிடுகிறது. அவ்வாறே பிரசங்கத்தில் நான் உபயோகிக்கும் வசனத்துக்கு மக்கள் கீழ்படிந்து பாவத்தை அறிக்கை செய்கிறார்கள். அப்போதே, அந்த நிமிடமே இயேசுவின் இரத்தத்தால் **இரட்சிப்பும், மனந்திரும்புதலும்** நடைபெற்றுவிடுகிறது. மக்கள் பாவங்களை உணர்ந்து அழுது மன்னிப்பு கேட்கிறார்கள். ஆண்டவர் மனமிரங்கி அவர்களுக்கு அந்த நிமிடமே பாவமன்னிப்பையும் அருளிச்செய்கிறார்.

**என் வசனத்துக்கு நடுங்கிறவனையே நான் நோக்கிப் பார்ப்பேன்** என்று கர்த்தர் சொல்கிறார்.

ஆகவே என் கூட்டங்கள் அறிவிப்பு வால்போஸ்டர்கள்,துண்டுபிரதிகளில் சுகமளிக்கும் விளம்பரங்கள் எதுவும் அறிவிக்காமலே என் கூட்டத்தில் பங்குக்கொள்ளும் மக்கள் **சுகம்** பெறுவதும், அவர்களிலிருந்து **பிசாசுகள்** ஓடுவதும் தொடர்ந்து நடைபெறுகிறது. இதுதான் என் ஊழியத்தின் இரகசியம்.

**வரம் கேட்கக்கூடாது**

**வரம் கொடுக்கப்படுவது ஆகும்.**

**அதனால் வரத்திற்காக அலைவது தவறு. வரத்துக்காக ஜெபிப்பதும் தவறு. எனவே ஊழியக்காரர்கள்,விசுவாசிகள் ஜாக்கிறதையாக இருங்கள்.**

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

# TVயில் கண்டது

**Salvation TV** - 5.7.2015.ஞாயிறு - குடும்ப ஜெபம்-**ஜோயல்-கரோலின்** கணவன் மனைவியான இருவரின் உரையாடல் மிகவும் பிரயோஜனமான உரையாடலாக அமைந்தது.

இரட்சிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்தினரும் கேட்கவேண்டிய நல்ல செயல்முறை செய்தியாக அமைந்தது. இவர்கள் நிச்சயம் FMPB,IEM போன்ற மிஷனரி இயக்கத்தில் உள்ள தம்பதியினர் என்றுதான் எண்ணி மிகவும் சந்தோஷப்பட்டேன்.

பல திருமண தம்பதியர் கூடியிருந்தனர். அவர்களின் கேள்விகளுக்கு இவர்கள் பதில் கூறிக்கொண்டிருந்தனர். சம்பாஷனையின் தொடக்கத்தில் கணவன்-மனைவி இணைந்து ஏன் ஜெபிக்கவேண்டும். தனித்தனியாக ஜெபிக்கலாமே? கணவன்-மனைவி என்பது இரண்டு தனி நபர்கள் அல்ல. எப்போது **திருமணம் நடந்ததோ** அப்போதே 3வது நபராக கர்த்தர் அவர்களுக்குள் ஒருவராக இணைந்துவிடுகிறார். 3 பரிமாணங்களாக -**முக்கோணம்போல்** அது அமைந்துவிடும்.

திருமணத்தின்போது இந்த **முப்பரிமாணம்** ஆரம்பிக்கிறது. காரணம் திருமணம் கர்த்தருக்குமுன் நடத்தும் உடன்படிக்கையின் அடையாளம். திருமணத்திற்குபின் இருவர்-மூவராகிறார்கள். ஜெபத்தில் அதை உணரலாம். இணைந்து ஜெபிப்பதில் ஒருமனம் இருந்தால் மட்டுமே இணைந்து ஜெபிக்கமுடியம். மனைவிக்கு நாட்டுக்கு, சபைக்கு ஊழியத்துக்கு என்று நீண்ட ஜெபம் செய்ய ஆவல். ஆனால் கணவருக்கும் அந்த ஆவல் இருந்தாலும் வேலைசெய்து வந்த களைப்பால் நீண்ட ஜெபத்தில் நாட்டம் இருக்காது. அப்படிப்பட்ட வேளையில் மனைவி தன் ஜெபத்தை சுருக்கி கொண்டு கணவன் ஜெபிக்கும் அளவு தானும் சுருக்கமாக ஜெபித்து முடிக்கவேண்டும். இல்லையானால் கணவன் - மனைவியுடன் இணைந்து ஜெபிக்க நாட்டம் இருக்காது.

எப்படியவாது ஒவ்வொருநாளும் கணவன்-மனைவி ஜெபிக்கும் நேரத்தை அவராவர் சூழ்நிலைக்கேற்ப மாற்றி அமைத்துக்கொள்ளவேண்டும்.

கணவன் வெளி ஊருக்கு வேலை விஷயமாக சென்றிருந்தாலும் ஒவ்வொரு நாள் இரவு தொலைபேசியில் அலுவலக விஷயத்தை கூறிவிட்டு தொலைபேசியிலேயே நாங்கள் ஒரு சிறு ஜெபம் இணைந்து செய்துவிடுவோம்.

கணவன்-மனைவி எப்போது ஜெபித்தாலும் மத் 18:20ம் வசனத்தின்படி **இயேசு நடுவில் இருக்கிறார்**. ஜெபிக்கும்போது கர்த்தரோடு கணவன்-மனைவி ஜெபத்தில் தொடர்பு வைத்துக்கொள்கிறார்கள்.

உமது பார்வையில் சேர்க்கப்பட்ட எங்களுக்கு நீர்தான் இணைப்பாளர். நாங்கள் இருவரும் இணைந்து தீர்மானம் எடுத்தாலும் உமது உதவி உமது பங்களிப்பு இல்லாமல் எங்களால் எதையும் செய்யமுடியாது என்பதுதான் அந்த கணவன்-மனைவி இணைந்து ஜெபிப்பதின் நோக்கம்.

இதுவரை மிக அருமையான சம்பாஷணையாக இருந்தது. கூட்டத்தில் பங்கெடுத்த ஒரு சகோதரி கேள்வி கேட்கிறார். நானும் கணவனும் இணைந்து ஜெபிக்கிறோம். ஆனால் கணவன் புரியாத பாஷையான **அந்நியபாஷையில்** ஜெபிக்கிறார். இப்படி எங்கள் ஜெபம் வித்தியாசப்படும்போது நான் என்ன செய்வது?

மேலும் நான் ஊழியக்காரரிடம் நம் கவலைகள் பிரச்சனைக்களைகூறி ஜெபிக்க அவர்களை தேடி செல்லாமா?என்று ஒருவர் கேட்கிறார்.

ஜோயல் கூறுகிறார்: ஊழியக்காரரைத்தேடி சென்று ஜெபிக்கலாம். தவறில்லை. அந்த ஊழியர்கள் இப்போது டிவி வழியாக ஜெபிக்கும்போது நீங்களும் அவர்களோடு இணைந்து ஜெபிக்கலாமே என்றார்.

அப்போதுதான் இவர்கள் **ஜெபத்தில் பெயர் அழைக்கும் பொய் சொல்லும் ஊழியர்களின்** கூட்டத்தை சேர்ந்தவர்கள் என்பது விளங்கியதும் டிவியை ஆப் செய்துவிட்டேன். நல்ல உரையாடல்- ஆனால் தவறான ஊழியர்களோடு நிகழ்ச்சி நடத்தும் தம்பதிகளின் தவறான உறவு. பிசாசு எப்படியெல்லாம் மக்களை வஞ்சிக்கிறான் என்பது விளங்குகிறது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

# விலாசம் புதுபித்தல்:

**ஜாமக்காரன் புதிய விலாச பட்டியல்** ஏறக்குறைய முழுவதுமாக தயாரிக்கப்பட்டு விட்டது. விலாசம் புதுப்பிக்கும் கார்டை அல்லது ஜாமக்காரன் வேண்டும் என்று விண்ணப்பிக்கும் கடிதங்களை வைத்து **புது விலாச பட்டியல்** தயாரித்துள்ளோம்.

பழைய வாசகர்களை நாங்கள் இழக்க விரும்பவில்லை. இரண்டுமுறை ஜாமக்காரன் மூலம் விலாசம் புதுப்பித்தல், ஞாபகமூட்டல் அறிவிப்பை எழுதியும் சிலர் கவனிக்கவில்லை. ஆனால் இவர்களெல்லாம் இப்போது மிக தாமதமாக ஒவ்வொருநாளும் நாங்கள் அறிவிப்பை கவனிக்கவில்லை என்றும், எங்கள் விலாசத்தை மறுபடியும் சேர்க்கவேண்டும் என்றும், ஏராளமானவர்கள் எங்களுக்கு எழுதிக்கொண்டேயிருக்கிறார்கள். அவர்கள் பெயர்களை நாங்கள் புதிய விலாச பட்டியலில் உள்ள **புதிய அங்கத்தினர் விலாசப்பட்டியலில் இணைத்து** அவர்களுக்கு ஜாமக்காரனை அனுப்ப ஆரம்பித்துவிட்டோம்.

புதிதாக யாராவது ஜாமக்காரன் தங்களுக்கும் வேண்டும் என்று விரும்பினால், உங்கள் முழு விலாசத்தையும் எங்களுக்கு எழுதி விண்ணப்பித்தால் உடனே விலாசப்பட்டியலில் நேரிடையாக **அவர்கள் விலாசத்தை** இணைத்துக்கொள்வோம்.

எங்கள் வாசகர் குடும்பத்தில் ஒருவராக அவர்களை இணைத்துக்கொள்வதில் நாங்கள் சந்தோஷப்படுகிறோம். அவர்களுக்காக ஜெபிப்பதிலும் தொடர்ந்து கவனம் செலுத்துவோம்.

புதிய விலாசப்பட்டியலுக்கு நாங்கள் கேட்டுக்கொண்டப்படி அவரவர்களின் விலாசங்களை எங்களுக்கு எழுதியும், பழைய விலாசத்திலுள்ள தவறுகளையும் குறிப்பிட்டு, தெளிவாக எங்களுக்கு கடிதம்,இமெயில் மூலமாக எழுதி இந்த புது விலாசப்பட்டியலை தயாரிக்க எங்களோடு ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் நன்றி கூறுகிறேன்.

**புதிய விலாசத்துடன்** இனி எங்களோடு தொடர்புக்கொள்ளவும், மறக்காமல் உங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் **கணணி எண்ணையும்** எழுதவும்.

**- (ஜாமக்காரனுக்கு சந்தா ஏதும் இல்லை).**

# தற்கொலையை நோக்கி பயணித்தவனுடன் உரையாடல்(கற்பனை உரையாடல்)

Selected

மனிதன் : **நான் தற்கொலை செய்துக்கொள்ளப்போகிறேன் என்னைத் தடுக்கவேண்டாம்**
தேவன் : நீ தற்கொலை செய்துக்கொள்ளக்கூடாது. நீ வாழவேண்டியவன்.
மனிதன் : **என்னை நேசிப்பார் யாருமில்லை (அழுது புலம்புகிறான்)**
தேவன் : அநாதி சினேகத்தால் நான் உன்னை சிநேகித்தேன்.
மனிதன் : **எனக்கு ரொம்பப் பயமாக இருக்கிறது(எரோ 31:3)**
தேவன் : பயமுள்ள ஆவியை கடவுள் நமக்குக் கொடுக்கவில்லையே(2தீமோ 1-7)
மனிதன் : **எனக்கு ஒன்றும் ஓடவில்லை. எதுவும் செய்ய முடியவில்லை.**
தேவன் : என்னைப் பலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்யமுடியும்.
மனிதன் : **கவலைகளால் நொந்துபோனேன். என்ன செய்வது?**
தேவன் : அவர் உங்களை விசாரிக்கிறவரானப்படியால் உங்கள் கவலைகளை அவர்மேல் வைத்துவிடுங்கள். (1பேது 5:7)
மனிதன் : **எனக்கு உதவி செய்வார் யாருமில்லை. அழுதான்**
தேவன் : ஆபத்துகாலத்தில் என்னை நோக்கிக்கூப்பிடு,நான் உன்னை விடுப்விபேன்.சங் 50:15
மனிதன் : **இதெல்லாம் என்னால் இயலாது நான் பலவீனன்.**
தேவன் : மனுஷனால் கூடாதவைகள் தேவனால் கூடும். லூாக் 18:27.
மனிதன் : **என் உள்ளம் சிதைந்து நான் சோர்ந்து போயிருக்கிறேன்.**
தேவன் : நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் என்று வேதத்தில் வாசிக்கவில்லையா? மத் 11:29.
மனிதன் : **என்னால் முன்னேறவே முடியவில்லையே (ஏங்கி அழுதான்)**
தேவன் : என் கிருபை உனக்குப்போதும் என்று கர்த்தர் கூறியிருக்கிறாரே(2கொரி12:9)
மனிதன் : **என் தேவைகளை நிறைவு செய்யமுடியவில்லையே**
தேவன் : என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் நிறை வாக்குவார். பிலி 4:19.
மனிதன் : **நான் ஒரு அநாதையைப்போல் அலைகிறேன்.**
தேவன் : என் தகப்பனும்,என் தாயும் என்னைக் கைவிட்டாலும் கர்த்தர் என்னைச் சேர்த்துக் கொள்வார் என்று வேதம் சொல்கிறதே. சங் 27:10.
மனிதன் : **நான் மதியற்றவன் என்று மற்றவர்கள் ஏளனம் செய்கிறார்கள்.**
தேவன் : ஐசுவரியத்தையும், சம்பத்தையும்,கனத்தையும் உனக்குத் தருவேன் என்று கர்த்தர் கூறுகிறார். 2நாளா 1:12.
மனிதன் : **நான் ஒரு மா பாவி, எனக்கு மன்னிப்பு கிடைக்குமா?**
தேவன் : பாவங்களை மன்னித்து எல்லா அநியாத்தையும் நீக்கி நம்மை சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும், நீதியும் உள்ளவராயிருக்கிறார் என்று வேதம் கூறுகிறது. 1 போ 1:9.
மனிதன் : **மரண பயம் என்னை சூழ்ந்து கலக்குகிறது.**
தேவன் :நானே உயிர்தெழுதலும்,ஜீவனுமாயிருக்கிறேன். என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான் என்று இயேசுகிறிஸ்து சொல்லுகிறார்.

# வடக்கு கேரளா CSI டையோசிஸ் ஆலுவா கன்வென்ஷன்



எர்ணாகுளம் அருகில் ஆலுவா என்ற இடத்தில் நடந்த கூட்டங்கள் மிகவும் ஆசீர்வாதமாக அமைந்தது. Rev.Joseph அவர்கள் கூட்ட ஏற்பாடுகளை செய்திருந்தார். சுமார் 30 ஆண்டுகளுக்கு பிறகு இந்த ஆலயத்தில் பிரசங்கிக்க அழைக்கப்பட்டேன். கர்த்தரின் நாமம் மகிமைப்படுவதாக. இப்படிப்பட்ட வேத பாட செய்தி எங்களுக்கு தேவை. மறுபடியும் கன்வென்ஷனுக்கு தேதி கொடுங்கள் என்று சபை பொருப்பாளர்கள் கேட்டது எனக்கு மிகவும் சந்தோஷத்தை கொடுத்தது. கர்த்தருக்கே துதி உண்டாவதாக.

## ஆலோசனை- ஜெபத்துக்கு தொடர்புக்கொள்பவர்கள் கவனிக்கவும்:

**ஒவ்வொரு மாதத்திலும்** வாரத்தில் **செவ்வாய்கிழமை** முதல் **புதன் மதியம் வரை** மட்டுமே நான் வீட்டில் **சேலத்தில் இருப்பேன்.**

ஆலோசனைக்கும்-ஜெபத்துக்கும் நேரில் **சேலம்** (தமிழ்நாட்டுக்கு) வர விரும்புகிறவர்கள், முன்பதாகவே நீங்கள் என்னை சந்திக்க விரும்பும் தேதிகளை கடிதத்தில் குறிப்பிட்டு எழுதி கேட்டு எங்களிடமிருந்து பதில் பெற்றப்பின் அல்லது போனில் தொடர்புகொண்டு சந்திக்கும் நாளை உறுதிப்படுத்திக்கொண்டு வரவும்.

தொலைப்பேசியில் ஆலோசனை பெறுகிறவர்கள் வேதவசன சந்தேகம் கேட்கிறவர்கள், ஜெப குறிப்புகளை பகிர்ந்துக்கொள்கிறவர்கள் காலை 8மணியிலிருந்து இரவு 11மணிவரை தொடர்புக் கொள்ளலாம்.

**(தினசரி** மதியம் 2 மணியிலிருந்து மாலை 5மணிவரை போனில் தொடர்புக்கொள்ள முயலவேண்டாம்.) குறிப்பிட்ட அந்த நேரம் நேரில் வருபவர்களுக்காக ஜெபிக்கும்நேரமாகும். மேலும் அது **நாங்கள் ஒய்வு** எடுக்கும் நேரமுமாகும்.

அந்த **3மணி நேரம் எங்கள் தொலைபேசியை ஆப் செய்து வைத்து விடுவோம்** என்பதை நீங்கள் அறிய விரும்புகிறேன்.

‘ வடஇந்திய ஊழியங்களுக்கு நான் சென்றால் **செவ்வாய்கிழமையில்** வீட்டில் இருக்கமாட்டேன் என்பதையும் அறியவும்.

# அடுத்து என்ன படிக்கலாம்?

12ம் பள்ளி படிப்பிற்குப் பிறகு வழக்கமான படிப்பைத்தவிர ஏராளமான அறிவுசார் படிப்புகள் இருக்கின்றன. அவற்றை சிலவற்றை கீழே கொடுத்துள்ளோம்.

**Selected**

| | |
|---|---|
| விஞ்ஞானம் | - Natural Science |
| புவி அறிவியல் | - Earth Science |
| கணிதம் | - Mathematics |
| பொறியியல் | - Engineering & Tech |
| சமூக விஞ்ஞானம் | - Social Science |
| கலைத்துறை | - Humanities |
| வணிகவியல் | - Business |
| கலைகள் | - Arts and Crafts |
| இயற்பியல் | - Physics |
| பூதியல் அணுவியல் | - Atomic Physics |
| ஒளியியல் | - Optics |
| ஒலிவியல் | - Acoustics |
| இயக்க விசையியல் | - Kinetics |
| இயக்கவியல் - | - Mechanics |
| பாய்ம இயக்கவியல் | - Fluid Mechanics |
| வெப்ப இயக்கவியல் | - Thermodynamics |
| மின்காந்தவியல் | - Electromagnetics |
| அணுக்கரு இயற்பியல் | - Nuclear Physics |
| புவி இயற்பியல் | - Geophysics |
| குவாண்டம் இயற்பியல் | - Quantum Physics |
| வானியல் | - Astronomy |
| அண்டவியல் | - Cosmology |
| விண்வெளி அறிவியல் | - Space Science |
| உயிரியல் | - Biology |
| உடற்செயலியல் | - Physiology |
| விலங்கியல் | - Zoology |
| தாவரவியல் | - Botany |
| தொல்லுயிரியல் | - Paleontology |
| நுண்ணுயிரியல் | - Paleontology |
| உயிர்வேதியியல் | - Microbiology |
| மூலக்கூறு உயிரியல் | - Microbiology |
| மரபியல் | - Genetics |
| வேதியியல் | - Chemistry |
| இரசாயனவியல் | - Biochemistry |
| கரிம வேதியியல் | - Organic chemistry |
| கனிம வேதியியல் | - Inorganic chemistry |
| விகிதவியல் | - Stoichimometry |
| மின்னிரசானவியல் | - Electrochemistry |
| நிறமாலைகாட்டியல் | - Spectroscopy |
| நச்சியல் | - Toxicology |
| பொருளறிவியல் | - Material science |
| உலோகவியல் | - Metallurgy |
| மருத்துவவியல் | - Medical Science |
| உள்ளமைப்பியல் | - Anatomy |
| செவியியல் | - Otology |
| கண்ணியல் | - Pohthalmology |
| பல்லியல் | - Dentistry |
| தோலியியல் | - Dermatology |
| திசுவியல் | - Histology |
| ஏதுவியல் | - Etiology |
| மிடற்றியல் | - Laryngolog |
| உணர்வகற்றியல் | - Anesthesiology |
| நெவிநாசிமிடற்றியல் | - Otorhinolaryngology |
| அறுவை மருத்துவம் | - Surgery |
| மருந்தியல் | - Pharmacology |
| உணவியல் | - Nutrition |
| நலமீட்பு பணி | - Nursing |
| பிறப்புபியல் | - Obsterics |
| நரம்பியல் | - Neurology |
| கணணியியல் | - Computer Science |
| நரம்பியல் | - Neurology |
| வரலாறு | - Histroy |
| பொருளாதாரம் | - Ecnomics |
| புள்ளியியல் | - Statistics |
| புவியமைப்பியல் | - Geology |
| ஆங்கிலம் | - English |

# கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்:



திருமதி.எப்சிபா

அமெரிக்காவில் **மெத்தடிஸ்ட் சபைகளின்** சீனியர் பாஸ்டரும், இலங்கையில் பிறந்து வளர்ந்தவருமான Rev.Dr.DANIEL அவர்களின் மனைவி **திருமதி.எப்சிபா** அவர்கள் சில காலம் வியாதி படுக்கையிலிருந்து நல்ல ஜெப ஆயத்தத்துடன் தன் ஆவியை கர்த்தரிடம் ஒப்படைத்தார்.

## இணைப்பிரியா அன்பு தம்பதிகள்:

மிகவும் சில தம்பதிகள் மட்டுமே ஒருவரையொருவர் மரணம்வரை பிரியாமல் அன்பைக்காட்டி வாழ்பவர்கள் ஆகும். திருமண வாழ்க்கையை சட்டையை மாற்றுவதுபோல் வாழ்ந்து கணவன்-மனைவி விவாகரத்து செய்தும்,அதுமட்டுமல்லாமல் இவர்கள் தங்கள் வாழ்வில் பல திருமணங்கள் செய்து வாழ்ந்தும் உண்மையான சந்தோஷம் திருப்தி இல்லாமல்தான் இப்போதும் வாழ்ந்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட இந்த நவீன காலகட்டத்தில், மற்றவர்களுக்கு நல்ல மாதிரியுள்ள இணைப்பிரிய ஜோடிதான் **Dr.தானியேல்** தம்பதியினர் ஆகும். 1969ம் வருடம் முதல் இவர்களை நான் அறிவேன். இலங்கை **பண்டாரவிளை** என்ற ஊரில் நான் கூட்டங்கள் நடத்திய காலங்களில் நாங்கள் குடும்பமாக மிக நெருக்கமாக உறவினர்களைப்போல் இவர் குடும்பத்தோடு பழகினோம்.

**சகோதரி.எப்சியா** அவர்கள் எப்போதும் சிரித்த முகம் கொண்டவராகவே இருப்பார். உலகின் பல நாடுகளுக்கு **Dr.டேனியல்** அவர்கள் ஊழியம் நிமித்தம் சென்றாலும் இருவரும் ஒன்றாகவே செல்வார்கள். இவர்களுக்கு 3 பிள்ளைகள் நல்ல நிலையில் அமெரிக்காவில் IOWA என்ற மாநிலத்தில் வாழ்கிறார்கள்.



**Mrs.Hepsiba - Rev.Dr.Daniel**

சகோதரி.**எப்சிபாடேனியல்** அவர்கள் என் மீதும், என் குடும்பத்தின்மீதும் மிகுந்த அன்புகொண்டவர். சகோதரியின் ஆவிக்குரிய ஜீவியத்துக்காகவும், அவர் தன் கணவரான **Dr.டேனியல்** அவர்களுக்கும், அவர் ஊழியங்களுக்கும் சகோதரி அவர்கள் பக்கபலமாகவும், நல்ல ஆலோசகராகவும் வாழ்ந்த அவர் வாழ்க்கைக்காக நான் தேவனைத் துதிக்கிறேன்.

கடந்த வருடம் அவர் மரண படுக்கையிலிருந்து தப்பித்து ஆஸ்பத்திரியிலிருந்து IOWAவில் உள்ள தன் வீட்டுக்கு திரும்பியபோது நான் அமெரிக்கா சென்று நேரில் அவர்களை சந்தித்தேன். என் தமாஷ் வார்த்தைகளை கேட்டு அந்த பலவீன சூழ்நிலையிலும் மிகவும் ரசித்து மனம்விட்டு குலுங்கிகுலுங்கி சிரித்த அந்த கடைசி காட்சி என் மனதைவிட்டு நீங்காத காட்சியாகும்.

Dr.டேனியல் அவர்களுக்கும், அவருடைய பிள்ளைகள், கூடப்பிறந்த சகோதரியின் குடும்பம் யாவருக்கும் கர்த்தர்தாமே ஆறுதலையளிப்பராக. மனைவி **எப்சிபா** அவர்களின் பிரிவு **Dr.டேனியல்** அவர்களுக்கு மிகப்பெரிய இழப்பாகும். தொடர்ந்து இந்த குடும்பங்களுக்காக ஜெபிப்போம்.

(இவர்கள் நீண்டகால என் ஜாமக்காரன் வாசகர் குடும்பமாகும். ஜாமக்காரன் கையில் கிடைத்தவுடனே ஒரு வரிவிடாமல் வாசித்து உரிமையோடு விமர்சனமும் சொல்வார்கள்).

# ஜெபம் விலைக்கு விற்கப்படும்

‘ **ஊழிய வியாபாரம் என்றால் என்ன?: இயேசு அழைக்கிறார்** ஊழியத்துக்கு 1000ரூபாய் அனுப்பினால் பணம் அனுப்பும் உங்கள் பெயர் டிவியில் எழுதி காட்டப்படும். அப்படியே உங்களுக்காக ஜெபம் ஏறெடுக்கப்படும். 10000ரூபாய் காணிக்கை அனுப்பினால் டிவி நிகழ்ச்சியில் உங்கள் குடும்பபோட்டோ வெளியிடப்படும். உங்களுக்காக **விசேஷஜெபம்** ஏறெடுக்கப்படும். அதோடு உங்களுக்காக தனிப்பட்ட முறையில் ஜெபிக்கப்படும். இந்த விளம்பரத்தில் உள்ள வித்தியாசம் கவனிக்கவும். 1000ரூபாய்க்கு **சாதாரண ஜெபம்.** 10000ரூபாய்க்கு **விசேஷ ஜெபம்**(Special) ஏறெடுக்கப்படும். **சாதாரண** ஜெபத்துக்கும்,**விசேஷ** ஜெபத்துக்கும் என்ன வித்தியாசம் என்று அழைக்கிறார் அலுவலகத்தில் கேட்டு தெரிந்துக்கொள்ளவும். எனக்கு அந்த வித்தியாசம் தெரியவில்லை. சாதா தோசை-மசாலா தோசை என்றால் நமக்கு விளங்குகிறது. மாதம் 100 **அனுப்பினால்** ஒருமுறைமட்டும் உங்களுக்காகவும், உங்கள் குடும்பத்துக்காகவும் ஜெபம் ஏறெடுக்கப்படும். **ஒரு பிள்ளைக்கு 8000 ரூபாய் கொடுத்தால் 25வருடத்துக்கு அந்த பிள்ளைக்கு பாதுகாப்பு கிடைக்கும். இயேசு அழைக்கிறார் ஊழியத்தில் பங்கும்,மாநில அளவில் மார்க்கும்** முதலிடமும் கிடைக்கும். விலைக்கேற்ற ஜெபம் என்பதை விளங்கிக்கொள்ளமுடிகிறதா?.

‘ **சகோ.மோகன் சி.லாசரஸ்** (வீடுகட்ட பணம்) நாலுமாவடி **திறப்பின் வாசலுக்கு** 5000ரூபாய் காணிக்கை அனுப்பியதால் ஒரு வாரத்தில் வீட்டுகதவை ஒரு நபர் தட்டி 10லட்சம் ரூபாய் வீடுகட்ட எங்களுக்கு கொடுத்துவிட்டுபோனார். முன்பின் தெரியாத நபர் 10லட்சம் வீடுதேடிவந்து கொடுக்கிறார். இதை நம்புகிறீர்களா?. **இது மேலே குறிப்பிட்ட ஊழியர்களின் ஜெப விளம்பரம்.**

**JULY 2015**

# Printed Book/Book Post

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.